விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 19 வியாழக்கிழமை (04.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259

சர்வதேசத்தினை நாடுவதே தமிழர்களின் அடுத்த நடவடிக்கை

முதலமைச்சர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு) சர்வதேச நாடுகளுடன் எமது பிரச்சினைகள் குறித்து ஆராய வேண்டிய ஒரு கட்டத்துக்குள் தமிழ் மக்களாகிய நாம் உட்படுத்தப்பட்டுள்ளோம். உள்நாட்டில் எமது குரலுக்கு மதிப்பில்லை என்றதாலேயே நாம் சர்வதேசத்தை நாடுகிறோம் என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இணைத் தலைவரின் உரையின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவரின் உரை வருமாறு. எமது மாகாண மக்கள்மற்றையமாகாண மக்கள் போலல்ல. அவர்கள் போரின உக்கிரத்தில் இருந்து விடுபட்டு வந்துள்ளார்கள். அவர்களின் பிரச்சினைகளும் தேவைகளும் விசேடமானதும் தனித்துவமானதுமாவன. எல்லோருக்கும் ஒரே 19 ஆம் பக்கம் பார்க்க....

ஹன்டர் மோதி மாணவன் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முழாங்காவில் பகுதியில் ஹன்டர் ரக வாகனம் மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவன உயிரிழந்துள்ளதாக முழாங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் முழாங்காவில், சோலை நிலா குடியிருப்பைச் சேர்ந்த சு.தமிழ் மாறன் (வயது 07) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸில் இருந்து இறங்கி மாணவன்அந்த பஸ்ஸிற்கு முன்னால்சென்ற வேளை, பஸ்ஸை முந்திக்கொண்டு சென்ற ஹன்டர் 19 ஆம் பக்கம் பார்க்க....

ஹயஸ் மோதி சிப்பாய் பலி

(மல்லாவி)

கிளிநொச்சி, இயக்கச்சி பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற வாகன விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார்.

சைக்கிளில் இரவு நேர ரோந்து பணியில் ஈடுபட்டுவிட்டு மீண்டும் முகாமுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது பின்னால் சென்ற ஹயஸ் வான் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இயக்கச்சி பிரதேசத்தில் உள்ள இராணுவ முகா 19 ஆம் பக்கம் பார்க்க....

காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகை

(யாழ்ப்பாணம்)

காங் கேசன்துறை பிரதேசத்தில் ஜனாதிபதி மாளிகை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன்அதற்கான நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து வருவதாக தெரியவருகிறது.

காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்படும் ஜனாதிபதி மாளிகையின் நிர்மாணப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்ட விதம் மற்றும் செலவான பணம் பற்றி எந்த தகவல்களும் இது வரை வெளியிடப்படவில்லை.

காங்கேசன்துறையில் அழகான கடற்கரை பகுதியில்சுமார் ஒரு கிலோ மீற்றர்நிலப்பரப்பிற்குள்இந்த ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஜனாதிபதி மாளிகையுடன் ஜனாதிபதிக்கு நாட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மாளிகைகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரிக்கும்.

ஏற்கெனவே கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் போன்ற பிரதேசங்களில 19 ஆம் பக்கம் பார்க்க....

மருத்துவபீடத்தில் நிகாப் அணியத் தடை

யாழ்.பல்கலை நிர்வாகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட முஸ்லிம் மாணவிகள் நிகாப் அணிவதற்கு மருத்துவபீட நிர்வாகம் தடைவிதித்துள்ளது.

மருத்துவபீட மாணவ கை ஏட்டில் ஆள் அடையாளத்தை மறைக்கும்படியான உடைகள் அணிவதற்கு அனுமதிக்கப்படாத நிலையிலேயே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவபீட பீடாதிபதி எஸ்.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

முகம்முழுவதனையும்மறைத்து இரு கண்கள் மட்டும் தெரியும் உடையான நிகாப் அணிவதற்கே தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் சாதாரணமாக அணியப்படும் பர்தா (ஜிகாப்) விற்கு தடை விதிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவ பீடத்தில் நடைபெற்ற பரீட்சைக்கு முகம் முழுவதனையும் மறைக்கும்படியான நிகாப் அணிந்து கொண்டு ஒரு மாணவி தோற்றச் சென் 19 ஆம் பக்கம் பார்க்க....

தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்க அனைவரும் போராட வேண்டும்

கருணாநிதி அறைகூவல்

(சென்னை)

அனைவரும் சேர்ந்து போராடினால், ஈழத்தில் வாழும் தமிழருக்கு உண்மையான சுதந்திரத்தை, சுயமரியாதை வாழ்வைப் பெற்றுத் தருவதற்கான போராட்டத்தில்வெல்ல முடியும்என தி.மு.க. தலைவர்மு.கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுக் காலையில் நடந்த டெசோ ஆர்ப்பாட்டத்தில் பேசிய தி.மு.க. தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷவை ஐ.நா. பொது அவையில் பேச அனுமதிக்கக்கூடாது. ஐ.நா. விசாரணைக குழுவுக்கு இந் 20 ஆம் பக்கம் பார்க்க....

ராஜிவ் காந்தி கொலை புலிகளுக்கு தொடர்பில்லை

மூத்த பத்திரிகையாளர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு என்பது சந்தேகம் என்று புதிய புதிருடன் ஒரு புத்தகம் வெளியாகி உள்ளது.



ராஜிவ் கொலை குறித்து பல புத்தகங்கள் வந்துவிட்டன. தற்போது டில்லியைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர்ஃபெரஸ்அஹ்மத் ராஜிவ்காந்தியின்உள்வேலைப்படுகொலை என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். இந்தப் புத்தகம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ராஜிவ்கொலை என்பதே ஒரு அரசியல் ஆதாயத் 19 ஆம் பக்கம் பார்க்க....

15 கிலோக்கிராம் கஞ்சா மீட்பு

(கொழும்பு)

யாழ்.இளவாலை நொனசைப் பகுதியிலுள்ள பற்றையொன்றில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 15 கிலோ கஞ்சா பொதியொன்று மீட்கப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். 19 ஆம் பக்கம் பார்க்க....

ஐ.நா.சர்வதேச விசாரணையில் மக்கள் சாட்சியமளிக்கமுடியும்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கெதிராக சர்வதேசத்தினால் மேற்கொள்ளப்படும் சர்வதேச விசாரணையில் எவ்வாறு மக்கள் சாட்சியமளிப்பதென்பதனை முதன்முறையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ளது.

இவ்வழிமுறையில் சாட்சியமளிப்பதன் மூலம் சர்வதேசத்திடம் இங்கு நடைபெற்றது இனப்படுகொலையே என்பதனை உறுதியாக கூற முடியும் என த.தே.ம.மு. தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வெளியிட்டுள்ள விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. விசாரணை உத்தியோக பூர்வமாக 2001 காலப்பகுதியின் பின்னரான விடயங்களே கவனத்தில் எடுக்கும். என்றாலும் இலங்கையில் நடந்த. நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை முழுமையாக விளங்கிக்கொள்ள உதவும், எந்த சம்பவத்தைப்பற்றிய தகவலுக்கும் உதவும் எனக் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் 1948க்குப் பின்னர் நடை பெற்ற சம்பவங்கள் தொடர்பல் சாட்சியமளிப்பதில் தடையில்லை.

ஐ.நா. விசாரணை உத்தியோக பூர்வமாக 2012 காலப் பகுதியின் முன்னரான விடயங்களே கவனத்தில் எடுக்கும் என்றாலும் இலங்கையில் நடந்த. நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள உதவும் எந்த சம்பவத்தையும்பற்றிய தக 19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பிணை எடுக்க எவரும் முன்வரவில்லை கமலுக்கு விளக்கமறியல் நீடிப்பு

வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரனை பிணையில் எடுப்பதற்கு எவரும் வராத காரணத்தால், அவர் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கமலேந்திரனை 2 இலட்சம் ரூபாய் காசுப் பிணை மற்றும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்ன லிங்கம் பிரேம்சங்கர் கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி அனுமதியளித்தார்.

வழக்கு முடிவடையும் வரையில், யாழ்ப் பாணத்தில் கமலேந்திரன் இருக்க முடியாது எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், வாரத்தில் ஒரு நாள், வெள்ள வத்தை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிமன்ற அனுமதியில்லாமல் எக்காரணம் கொண்டும் வெளிநாடு செல்ல முடியாது என்றும் நீதிபதி தெரிவித்தார்.

அத்துடன், இரண்டாவது சந்தேகநபரான நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்சியனின் மனைவி அனிட்டாவை, 50 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணைகளிலும் செல்ல நீதிபதி அனுமதியளித்தார்.

இந்த கொலை வழக்கு தொடர்பான சாட்சியங்களை எந்தவிதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது என அவ்விருவருக்கும் நீதிபதி கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் செல்வநாயகம் லெனின் குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, கமலேந்திரனையும் அனிட்டாவையும் எவரும் பிணை எடுப்பதற்கு முன்வரவில்லை.

இதனையடுத்து, எதிர்வரும் 16ஆம் திகதி வரை இருவரையும் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, மூன்றாவது சந்தேகநபரான இளைஞனுக்கு பிணை மனுக்கோரி விண்ணப்பிக்காத நிலையில் அவருக்கு பிணை வழங்கப்படவில்லை.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்சியன் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி, அவரது வீட்டில வைத்து சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக மீட்கப பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

அதிக இராணுவ பிரசன்னத்தால் தமிழ் மக்களிடையே பயப்பீதி

முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிங்கள குடியேற்றங்களும் அதிக இராணுவ பிரசன்னங்களும் தமிழர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜபெருமாள் தெரிவித்துள்ளார்.

தமிழக செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைப்பது பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

இலங்கையில் பாதுகாப்புக்காக மூன்றில் ஒரு பங்கு நிதி அநாவசியமாக செலவிடப்படுகிறது. இந்த நிதியை, கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டுக்காக பயன்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர ராஜபக்ஷ அரசாங்கத்தை இசைய வைப்பது இந்தியாவின் பொறுப்பாகும் என்று வரதராஜபெருமாள் தெரிவித்தார்.

இந்தியாவின் அனுசரணையுடனேயே இந்திய-இலங்கை உடன்படிக்கை செய்யப் பட்டது. எனவே அந்த உடன்படிக்கை முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும்.

தற்போது மக்களால் வடக்கு கிழக்குக்கு முதலமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அந்த மாகாணங்களுக்கு அதிகாரங்கள் இல்லை என்று பெருமாள் குறிப்பிட்டார்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுகின்றமை குறித்து கருத்து வெளியிட்ட பெருமாள் 1974 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் கீழ் பாக்குநீரிணையில் இரண்டு நாட்டு மீனவர்களும் பயமின்றி தொழிலில் ஈடுபட முடியும். இது தற்போதும் அமுலில் உள்ளதாக வரதராஜபெருமாள் தெரிவித்தார். (எ-11)

புதிய தேர்வும் பணி நிலைகளும்

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும்

Optimo International Pvt நிறுவனத்தின் கிளைகள் மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் ஆரம்பமாக இருப்பதனால்

6 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் உள்ளன

NO. 28, 3rd Cross Street, Jaffna.

0770771377/0771908997/0771882507

(7579)

ஆசிரியர்கள் தேவை

கொழும்பில் பாடநூல்களையும், பயிற்சி வினாத்தாள்களையும் தயாரித்து தேசிய ரீதியில் வெளியிடும் நிறுவனத்திற்கு, தமிழ் மொழியில் பாடநூல்களையும், மாதிரி வினாத்தாள்களையும், தவணை அடிப்படையில் வினாத்தாள்களையும் தயாரித்து வழங்கக்கூடியவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி (C-8389)

0715794468/0114014438

வேலை வாய்ப்பு

நீங்கள் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவரா!....

யாழ் நகரில் சந்தைப்படுத்தல் துறையில் மாதாந்தம் 25000/- இற்கு மேல் அதிகமான வருமானத்தைப் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! நழுவ விடாதீர்கள்!

கல்வித்தகைமை அவசியமில்லை

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:- 077 011 1032, 077 011 1034

(சி-8390)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. சு.வினோத் அவர்களது அன்புத் தந்தையார்

சிவசுந்தரம் சுந்தரேஸ்வரன்

அவர்கள் இறைபதம் அடைந்தமையை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.

(சி-8403)

இலங்கை அகதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(சென்னை)

தமிழக முகாம்களில் இருந்து போலி முகவர்கள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக பொலிஸார் முகாம்களுக்கு சென்று எச்சரித்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் இலங்கை தமிழர்கள் படகின் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு கடவுச் சீட்டு மற்றும் விசா இன்றி தப்பிச் செல்ல அதிகமானவர்கள் முயற்சிப்பதாக தகவல்கள் வந்தவண்ணம் உள்ளமையால் இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதற்காக பொய் பேசி போலி முகவர்கள் இடைத் தரகர்களை அகதிமுகாமுக்குள் வசிப்பவர்களிடம் அதிகளவிலான பணம் அறவிட்டு அவர்களை ஏமாற்றி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

கடை வாடகைக்கு

பருத்தித்துறை நகரில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு

0771745178

(C-8402)

SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall) விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்

தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5392

(C-8394)

CIMA

Chartered Institute of Management Accountants

@

ACCTECM

Lecturer from Colombo & Kandy

No.01, 2nd lane, Power house Road, Jaffna.

T.P: 021 221 7733, 077 995 5183

(7576)

கள்ளநோட்டுடன் பெண் கைது!

(வவுனியா)

ஐயாயிரம் ரூபாய் கள்ள நோட்டுடன் பெண் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து பஸ்ஸில் வவுனியாவுக்கு வந்து அங்கிருந்து புத்தளம் பஸ்ஸில் ஏறி பயணித்துள்ளார் குறித்த பெண். பஸ் மதவாச்சிப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் நிறுத்தப்பட்டது. இதன்போது இந்தப் பெண் அங்கிருந்த பழக்கடை ஒன்றில் ஐயாயிரம் ரூபாய் தாளைக் கொடுத்து பழங்களை வாங்கியுள்ளார்.

பணத்தாளை அவதானித்த கடை உரிமையாளர், அது போலி நாணயத்தாள் என இனங்கண்டு, பெண்ணை மறித்து வைத்துக் கொண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்தனர். கைதானவர் இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்றும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-11)

சட்டவிரோத சிகரெட்கள் மீட்பு

(கொழும்பு)

20 இலட்சம் பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகள் தெமட்ட கொட பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மேற்படி சிகரெட்டுகளை வலான மோசடி தடுப்புப் பிரிவினர் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

மீட்கப்பட்ட சிகரட்களின் பெறுமதி 20 இலட்சம் ரூபாயுக்கும் அதிகமாகும் என கணக்கிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவிக்கின்றது. சிகரெட்டுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வலான மோசடி தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (எ-11)

மட்டு.வில் ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் - கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள வடிச்சல் காட்டில் ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

ரீ- 56 ரக துப்பாக்கி மகஸின்கள் 2, ரீ-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் 192, மோட்டோர் குண்டு 1 (61 ரகம்) என்பனவே மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து கரடியனாறு பிரிவுக்குப் பொறுப்பான புலனாய்வுப் பகுதியினரால் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டு கரடியனாறு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த ஆயுதங்கள் குறித்து புலனாய்வுப் பிரிவு பொலிஸாரும், கரடியனாறுப் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வகம் நிறுவனத்தின் தடகளப் போட்டிகள்

வாழ்வக நிறுவனத்தால் நடத்தப்படும் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்த தடகளப்போட்டி வாழ்வகத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகச் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினராக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் ராஜேந்திரம்.யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மு.மலரவன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

வீதிகளை புனரமைத்து தருமாறு அதிகார சபையிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி கரந்தன் சந்தியிலிருந்து ஊரெழு அம்மன் கோவிலடி செல்லும் கரந்தன் வீதியையும் நீர்வேலி மாசவன் சந்தியிலிருந்து அச்செழு வரை செல்லும் புன்னாலைக்கட்டுவன் வீதியையும் புனரமைத்து தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கடிதம் மூலம் கோரிக்கையொன்றை நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத தலைவர் த.பரமசாமி விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மேற்குறித்த வீதிகள் நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாகவுள்ளது.

இவ்வீதியானது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், வர்த்தகர்களின் அன்றாட பாவனைக்கு மிகவும் அவசியமானது.

இவ்வீதிகள் திருத்தம் செய்யப்படாதிருப்பதால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

எனவே, இவ்வீதிகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு உடன் திருத்தம் செய்து தரும்படி கேட்டுக் கொண்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

CIMA
Chartered Institute of Management Accountants
@
Wisdom
021 2220727 | 021 7200777

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன்
200இற்கும் மேற்பட்ட மூவினத்தையும் சேர்ந்த முதியோருக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடை பெற்றது.
இதில் நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் மற்றும் தொழில் அமைச்சர் கௌரவ காமினி லொக்குகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் மூத்த கலைஞர்களை கௌரவித்து மாதாந்த நிதியுதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வு கொழும்பில் நடை பெற்றது.
நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன், தொலைத்தொடர்புகள் தகவல் தொழில்நுட்பவியல் பிரதியமைச்சர் கௌரவ பிரபா கணேசன் மற்றும் இலங்கையின் முதல் தமிழ் திரைப்பட கதாநாயகி உட்பட பல கலைஞர்களும் கலந்து இந் நிகழ்வைச் சிறப்பித்தனர்.

அமைச்சர் கௌரவ காமினி லொக்குகே, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நாமல் ராஜபக்ஷ ஆகியோருடன் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர்

இராசி பலன்

04.09.2014
ஆவணி 19, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
தசமி முன்னிரவு 7.57 மணிவரை
மூலம் பிற்பகல் 12.54 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
வளவன்

மீனம் — தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், போசன சுகமுண்டு.

மேடம் — தடைகள் அகன்று தனவரவுகள் பெருகும் நாள், மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், பயணங்கள் எளிதில் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு ஒரு சில கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

இடபம் — வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணத்தின்போது பொருட்களில் கவனம் அவசியம், செலவுகள் அதிகரிக்கும்.

மிதுனம் — பணத்தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும், களஸ்திர நன்மையுண்டு.

கும்பம் — உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், வருமானம் திருப்தி தரும்.

மகரம் — இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சிறு விரயங்கள் உருவாகும், வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

தனுசு — காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

விருச்சிகம் — குடும்ப மகிழ்ச்சி கூடும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள், வரவேற்பு கைகூடும்.

துலாம் — பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் நாள், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

கடகம் — உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி செய்திகள் மகிழ்ச்சி தரும், கௌரவமான நாள், காரிய அனுகூலமுண்டு, வழிபாடு சிறப்பினை தரும்.

சிம்மம் — சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறை வேற்றுவீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

கன்னி — பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், கல்வியில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மோடியுடன் மோதலுக்கு அரசு தயாராகின்றதா?

மனோ கேள்வி

(கொழும்பு)

எங்களிடம் சொல்லிவிட்டு, எங்கள் அனுமதியுடன் எங்கள் நாட்டு மாகாண முதல்வரை அழையுங்கள் என, மோடிக்கு இந்த அரசாங்கம் மறைமுகமாக சொல் கிறதா? இதன்மூலம் அரசாங்கம் மோடி அரசுடன் மோதலுக்கு தயாராகிறதா? என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்,

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ் வரன், இந்திய பிரதமர் மோடியை சந்திக்க செல்வதாயின், இலங்கை அரசுக்கு அறிவித் துவிட்டு, அரசின் அனுமதியுடனேயே செல்ல வேண்டும் என்ற அரசின் பிரதான கொரடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் திருந்தார்.

இது விக்னேஷ்வரனை நோக்கி சொல் லப்பட்ட கருத்து என்பதைவிட, மோடியை நோக்கி சொல்லப்பட்ட கருத்தாகவே இருக் கின்றது.

இலங்கையில் ஒரு அரசியலமைப்பு இருக்கின்றது. அதன்படி நடக்க இலங் கையின் அமைச்சர்கள், முதலமைச்சர்கள், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பேதமில்லாமல் கடமைப்பட்டுள்ளார்கள் என தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்.

இதை நான் ஏற்றுகொள்கிறேன். வெளி நாடு செல்வதாயின் நடைபெறவேண்டியது சட்ட அனுமதியா அல்லது சம்பிரதாய அறிவித்தலா என்பது எனக்கு தெரியாது.

ஆனால், அமைச்சர் தினேஷ் குண வர்த்தன, இந்நாட்டில் அரசியலமைப்பு ஒன்று உள்ளது என்றும் அதை மீறக்கூடாது என்றும் கூறுவது வியப்பை தருகிறது.

இதை உண்மையில் நாங்கள்தான் அவருக்கு சொல்லி ஞாபகப்படுத்த வேண் டும். இந்த நாட்டில் அரசியலமைப்பில் இருக்கும் சட்ட ங்கள் அமுல் செய்யப்படுவது இல்லை.

வட மாகாண முதலமைச்சருக்கு, 13 ஆவது திருத்தம் என்ற அரசியலமைப்பு சட்ட விதிகளின் படியிலான அதிகாரங்கள் வழங் கப்படவில்லை என்பது ஊரறிந்த உண்மை. எனவே, தமக்கு தேவையான போது அரசிய லமைப்பை ஞாபகப்படுத்துவதும், தேவை யில்லாதபோது அதை மீறுவதும் இந்த அரசின் கொள்கையாக இருக்கின்றது.

எங்கள் இல்லத்தில் நடைபெற்ற சோக நிகழ்வில் கலந்துகொண்டு வருத்தம் தெரி விக்க ஆளும்தரப்பு, எதிர்தரப்பு பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அனைவருக்கும் நன்றி. இதில் கலந்துகொண்ட பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முதல்வர் விக்னேஸ் வரனுடன் இணைந்து செயற்படும்படி, வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு, தான் அறிவுறுத்தல் வழங்கியதாக கூறி னார்.

நடைமுறைப்படுத்தப்படாத பொலிஸ் அதிகாரங்களை பற்றி பேசுவதற்கு முன், விக்னேஸ்வரனுக்கு நிர்வாக அதிகார ங்களே வழங்கப்படவில்லை என்றும் மேல்மாகாண முதல்வர் பிரசன்னா ரண துங்கவுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் வடமாகாண முதல்வருக்கு கிடையாது என்றும் இவை பற்றி தெரியுமா என்றும் நான் அவரிடம் கேட்டேன்.

அவ் வேளையில், ஹெலஉறுமயவின் மேல்மாகாண அமைச்சர் உதய கம்மன் பிலவும், ஐ.தே.க. எம்.பி யோகராஜனும் அங்கே இருந்தார்கள்.

நடைமுறை சிக்கல்களை தீர்க்க, விக்னே ஸ்வரனை சந்தித்து உரையாட தான் விரும புவதாகவும் அதை ஏற்பாடு செய்து தரும் படியும் பாதுகாப்பு செயலாளர் என்னிடமும் யோகராஜனிடமும் கோரிக்கை விடுத்தார்.

கலந்துரையாடல்கள் நடத்தலாம். ஆனால், இந்த கோரிக்கைகள், பிரகடனங்கள், உரையாடல்கள் இவற்றிலேயே மாத்திரம் காலம் கடத்தும் முறைமை இப்போது முடிவுக்கு வந்துகொண்டிருக்கின்றது.

சட்டத்தில் உள்ளவற்றை நிறை வேற் றவும், புதிய சட்டங்களை உருவாக்கவும் வேண்டிய காலம் இப்போது உதய மாகிக் கொண்டிருக்கின்றது. இதற்கு இந்திய அரசுடன் பேச வேண்டியுள்ளது.

இந்த சட்டங்களை நிறைவேற்ற இல ங்கை அரசை வலியுறுத்தும் கடப்பாட்டை இந்திய அரசுக்கு உள்ளதை அவர்களுக்கு ஞாபகப்படுத்தும் காலமும் வந்து கொண் டிருக்கின்றது.

ஆகவே, இந்திய அரசுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு பேசுவதை , குற்றமாக கரு தாமல், அதன் பின்னணியை கண்டறிந்து, இந்திய அரசுடன் மோதலுக்கு செல்லாமல், செயற்படவேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு இருக்கிறது. (இ)

தேர்தல் வன்முறைகளை தடுக்க அதிகாரமில்லை

தேர்தல் வன்முறைகளை தடுக்க அதிகா ரம் கிடையாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சில நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் அதிகளவில் தேர்தல் வன் முறைகள் இடம்பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் பாரி யளவில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தேர்தல் திணைக் களத்திற்கு கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர்தல் வன்முறைகளை வேடிக்கைப் பார்ப்பதனைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல்களை நடத்த முயற்சிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

தமிழக மீனவர்கள் விவகாரம் பல்டி அடித்தார் சுப்பிரமணியர்

(புதுடில்லி)

தமிழக மீனவர் படகுகளை விடுவிக்க வேண்டாம் என்று இலங்கைக்கு ஆலோ சனை கூறியதாக பேட்டியளித்திருந்த பா.ஜ.க வின் மூத்த தலைவரான சுப்பிரமணியன் சுவாமி, தற்போது தாம் அப்படிக் கூறவில்லை என்று மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தான் சென்று மகிந்த ராஜ பக்ஷவை சந்தித்த போது, தமிழக மீனவர் கள் எல்லை தாண்டி வந்தால் அவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துங் கள். அவர்கள் தொழிலாளர்கள். அதனால் விடுவித்துவிடுங்கள்.

ஆனால் அவர்களது படகுகளின் உரி மையாளர்கள் பணக்காரர்கள். அதை விடு விக்க வேண்டாம் என்று சொன்னேன். அதை த்தான் இலங்கை அரசு செய்து கொண்டிருக் கிறது என்று தொலைக் காட்சி ஒன்றிற்கு அளித்த நேர்காணலில் சுவாமி தெரிவித் திருந்தார்.

இவரது இந்தக் கருத்திற்கு தமிழகத்தில் கடுமையாக எதிர்ப்பு கிளம்பியது. அத்துடன், தமிழக முதல்வர் ஜெயலலிதா சுவாமியின் கருத்தைக் கண்டித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

மேலும் தமிழகம் முழுவதும் கடந்த 3 நாட்களாக சுப்பிரமணியன் சுவாமியின் கொடும்பாவி எரித்துப் போராட்டம் நடத்தப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் சுப்பிரமணியன் சுவாமி, தான் மீனவர் படகுகளை விடுவிக்க வேண் டாம் என்று இலங்கை ஜனாதிபதி ராஜ பக் ஷவிடம் கூறவே இல்லை என்று பல்டி அடித் திருக்கிறார்.

இது குறித்து விளக்கம் அளித்துள்ள சுப்பி ரமணியன் சுவாமி,

ஜெயலலிதா திரைத்துறையைச் சேர்ந்த வர். அவர் எழுதி வைக்கப்பட்ட கதையைத் தான் படிப்பார். நான் அப்படி எல்லாம் சொல்ல வில்லை.

நான் மீனவர்கள் நலனுக்காகத்தான் செயல்படுகிறேன். அதனால் பலருக்கு என் னைப் பிடிக்கவில்லை. இராமேஸ்வரம் மீன வர்கள் என்னை சந்தித்து இலங்கை சிறை யில் உள்ளவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத்தனர்.

அந்த மனுவைக் கொண்டு நான் ராஜ பக்ஷவிடம் கொடுத்தேன். அதனை ஏற்று மீனவர்களை ராஜபக்ஷ விடுவித்தார். ஆனால மீன்பிடி இயந்திரப் படகுகளின் உரிமை யாளர்கள் படகுகளை மீட்குமாறு என்னிடம் கோரிக்கை விடுவிக்கவில்லை.

ராஜபக்ஷ தான் மீன்பிடி படகுகளை விடுவிக்க முடியாது என்றார் என்று சுப்பிர மணியன் சுவாமி தெரிவித்துள்ளார். (எ-11)

பல்கலைக்கழக மாணவர்கள் ஆறு பேர் கடத்தப்பட்டனர்!

மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 6 மாணவர்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் கடத்திச் சென் றதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடத்திச் சென்ற மாணவர்களிடம் பல்கலைக கழகத்தின் வாடி வீட்டில் வைத்து விசாரணை நடத்தியுள்ளனர்எனவும்ஒன்றியம்குறிப்பிட்டுள்ளது.

மேற்படி 6 மாணவர்கள் விரிவுரைகள் முடிந்து நேற்று முன்தினம் மாலை விடுதிக ளுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப் போது விடுதிகளுக்கு அருகில் காத்திருந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவர்களை அழைத்துச் சென்றுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி சப்ர கமுவ பல்கலைக்கழகத்தின் சமூக மற்றும் மொழி பீடத்தின் முதலாம் ஆண்டில் பயின்ற தமிழ் மாணவர் மீது தாக்குதல் நடத்தி அசசு றுத்தும் வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட் டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும் அத்துடன்விடாது அந்த பீடத்தை சேர்ந்த யோகராஜா நிரோஷன் என்ற மாணவரை கைது செய்த பயங்கர வாத விசாரணைப் பிரிவினர் அவரை தடுத்து வைத்தனர் எனவும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கூறியுள்ளது.

மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் அதற்கு முன்னர் தாக்குதலுக்கு உள்ளான தமிழ் மாணவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைது செய்து கடந்த 23 நாட்களாக தடுத்து வைத்துள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த மாணவர் அடக்கு முறைக்கு பல்கலைக்கழக நிர்வாகம் நேரடி யாக சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி யுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அரசாங்கம் மிலேச்சத்தனமாக மாணவர் மீது அடக்குமுறையை மேற் கொண்டு பல்கலைக்கழகங்களுக்குள் இன வாதத்தை தாண்டும் முயற்சிகளில் ஈடுபட்டு ளளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா விசாரணை தகவல் கசிவு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகள பற்றிய இரகசிய தகவல்கள் தமிழீழ விடு தலைப் புலி ஆதரவு புலம்பெயர் மக்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சிங்கள ஊடக மொன்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேர வையின் விசாரணைகள் தொடர்பிலான 30 விடயங்கள் இவ்வாறு புலி ஆதரவாளர்க ளுக்கு கிடைத்துள்ளது.

இந்த 30 விடயங்கள் இலங்கை அரசா ங்கத்திற்குக் கூட கிடைக்கவில்லை.

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடமையாற்றி வரும் புலி ஆதரவாளர்கள் இந்த இரகசியங்களை கசியவிட்டுள்ளனர்.

மன்னார் மடு தேவாலயம் மீது இலங் கைப் படையினர் தாக்குதல் நடத்தினர் உள் ளிட்ட தகவல்கள் இந்த இரகசிய தகவல்க ளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சனல் 4 ஊடகத்தின் நோ பயர் ஸோன் காணொளி, வெள்ளைக் கொடி சம்பவம், ஊடகவியலாளர் சிவராம் படுகொலை, ஐ.நா காரியாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவங்கள் தொடர்பிலான சாட்சி யங்களை அளிக்குமாறு புலி ஆதரவா ளர்கள் கோரி வருவதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது. (எ-11)

கடல்நீரை சுத்திகரித்து நீர் பெற விசேட திட்டம்

ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

கடல் நீரின் உப்புத்தன்மையை அகற்றி அதனை பூரணமாக சுத்திகரித்து முழு நாட்டிற்கும் சுத்தமான குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அடுத்த வருடம் மேற்படி வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பல்வேறு நி ழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, மொனராகலை மடுல் கலை பகுதியில் பொதுச்சந்தை வர்த்தக நிலையத் தொகுதியும் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிற்கமைய ஒப்பே கொடை மத்திய மகா வித்தியாலயம், பகினாகா வெலை முஸ்லிம் மத்திய மகா வித்தி யாலயம், யசோதரா மகளிர் மத்திய மகா வித்திலயாலயம், விபுலானந்தா மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நிர்மாணி க்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்ப கூடங்களையும் ஜனாதிபதி திறந்து வைத்து உரையாற்றினார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

மாலைதீவு போன்ற நாடுகள் பலவற்றில் மேற்படி குடிநீர் விநியோக வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக் கின்றது.

எம்மால் நடைமுறைப்படுத்தப் படும் அவ் வேலைத்திட்டம் சாத்தியமாகும் பட்சத்தில் வரட்சியினால் ஏற்படும் சுத்தமான குடிநீர்ப் பிரச்சினைகளுக்கு பூரணமான தீர்வு களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மொனராகலை மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு இன்னும் மின்சார இணை ப்புக்கள் வழங்கப்படாமை குறித்து எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ் வருட இறுதிக்குள் அக்கிராமங்களுக்கு மின்சார வசதிகள் பூரண ப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

பொதுக்கூட்டம்

வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் இவ்வாண்டிற்கான பொதுக்கூட்டமும் சங்கத்தின் ஆட்சிக்குழுவின் நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணி தொட க்கம் பிற்பகல் 5 மணிவரை யாழ்ப்பாண பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

கலந்துரையாடல்

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தால் மனித இருப்பை அச்சுறுத்தும் அசாதாரண கால நிலை மாற்றம் பற்றிய கலந்துரையாடல் யூரோ வில் மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கழமை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழத்தின் புவியியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.ஏ.நோபெ ட்டின் உரையும் இடம்பெறவுள்ளது. ஆர் வலர்கள் அனைவரையும் தவறாது சமுக மளிக்கும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண் டுள்ளனர். (இ)

கைக்குண்டுடன் கைதானவருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

அம்பாறை சம்மாந்துறையில் கைக் குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபருக்கு கல்முனை மேல் நீதிமன்றினால் ஒருவருட கடூழிய சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறையில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 திகதி கைக் குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக சட்டமா அதிபரால் கல்முனை மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கு விசாரணை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மூலச்சான்றை அளித்துக்கொண்டிருக்கும் போது இவ் வழக்கின் சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

சந்தேக நபர் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்காமல் தானாகவே குற்றவாளி என்பதை ஒப்புக் கொண்டுள்ளபடியினாலும், அவரது குடும்ப சூழ்நிலையை கவனத்திற் கொண்டும் மேற்படி எதிரிக்கு ஒருவருடம் கடூழிய சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்து தீர்ப்ப ளித்தார். (இ)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு பத்தாண்டு பூர்த்தியாவதைமுன்னிட்டு நடத்தப்படும் சிறப்புப்போட்டிகள் – 2014

(வடக்கு மாகாணத்துக்குட்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு கொள்ள முடியும்)

கற்பித்தற் சாதன உருவாக்கப்போட்டி (ஆசிரியர்களுக்கானது)

அனைத்துத்துறை ஆசிரியர்களும் இப்போட்டியில் பங்கு கொள்ள முடியும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களை உருவாக்கி சமர்ப்பித்தல் வேண்டும். பங்கு கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தங்களது சுயவிபரங்களோடு கூடிய விண்ணப்பங்களை 15.09.2014 க்கு முன்னர் பொறுப்பு விரிவுரையாளர், விசேடகல்வித்துறை யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற்கல்லூரி, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். கற்பித்தல் சாதனங்களை ஒப்படைக்க வேண்டிய திகதி பின்னர் கடிதம் மூலம் அறிவிக்கப்படும்சித்திரப்போட்டி (மாணவர்களுக்கானது) போட்டிகள் பற்றிய விபரம் ஆரம்பப்பிரிவு 1-5, கனிஷ்ட, இடைநிலைப் பிரிவு 6-9, சிரேஷ்ட இடை நிலைப்பிரிவு 9-11, மேற்பிரிவு, க.பொ.த உயர்தரம் என்னும் மட்டங்களில் நடைபெறும். பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து ஆரம்பப்பிரிவு A4 அளவுத்தாளிலும் ஏனையவர்கள் A3 அளவுடைய தாளிலும் விரும்பிய வர்ண ஊடகத்தை பயன்படுத்தி வரைந்து பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு 20.09.2014 க்கு முன்னர் கிடைக்க கூடியவாறு தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

தலைப்புக்கள்

1. உட்படுத்தல் கல்வி
2. விசேட தேவையுடையோர் வாழ்வுக்கு ஒளியூட்டுவோம்
3. விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள்

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க சான்றிதழ்களும் பரிசில்களும்வழங்கப்படும் மேலதிக விளக்கங்களுக்கு 0776184250 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். (இ)

இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

மணமகள் தேவை	மணமகன் தேவை
பிறப்பு: 1988 கிறிஸ்தவம் (RC) நட்சத்திரம்: புனர்பூசம் 4 கி.பா: 2 ½ உயரம்: 5'5" தகைமை/தொழில் : அரசதொழில் (கனடா – சிற்ரிசன்) தொ.இ: B/3521	பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: உத்தரட்டாதி 2 கி.பா: 67 உயரம்: 5'2" தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி/ஆசிரியர் தொ.இ: G/3518
பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: விசாகம் 4 கி.பா: 48 செவ் 12 இல் உயரம்: 170 cm தகைமை/தொழில்: பட்டதாரி/வங்கி கணனி பொறியியலாளர் (சிங்கப்பூர்) தொ.இ: B/3522	பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம் 2 கி.பா: 24 உயரம்: 5'4" தகைமை/தொழில் BA,MA-Following தொ.இ: G/3531
பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: பூரம் 4 கி.பா: 60 சூரி செவ் 7 இல் உயரம்: 5'7" தகைமை/தொழில்: CIMA – 1st year / தனியார் வேலை (பிரான்ஸ் - Not PR) எதிர்பார்ப்பு: PR உள்ள பெண் தொ.இ: B/3525	பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: உத்தராடம் 3 கி.பா: 61 ½ உயரம்: 157 cm தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி/ஆசிரியர் தொ.இ: G/3532
பிறப்பு: 1976 இந்து நட்சத்திரம்: ரேவதி 3 கி.பா: 30 சூரி செவ் 11 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (UK – PR) தொ.இ: B/3526	பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: கேட்டை கி.பா: 41 ½ செவ் 7 இல் தகைமை/தொழில்: மாணவி தொ.இ: G/3535

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
(திங்கள் முதல் காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விநியோகம் தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைகாட்டி பிறைவேட் லிமிட் மூலம் வெளிநாட்டு கல்விக்கு நிதியூட்டம்

தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கடன்திட்டம் மூலம் வெளிநாட்டு கல்விக்கான வாய்ப்பு ஒன்றினை திசைகாட்டி தற்போது மேற்கொண்டுள்ளது.

திசைகாட்டியின் வெளிநாட்டு கல்விக்கு நிதியூட்டம் தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று பருத்தித்துறை வீதியில் உள்ள திசைகாட்டியின் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே திசைகாட்டியின் சர்வதேச தொடர்பாளர் எஸ்.சுபசீலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளுக்கு கல்விக்காக செல்லும் மாணவர்கள் 4 வருடங்கள் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு செல்பவர்கள் வெளிநாடுகளில் உள்ள அவர்களது உறவினர்களிடம் பணம் பெற்றும் மீற்றர் வட்டிக்கு பணத்தை வாங்கியும் தம்மிடம் உள்ள பெறுமதி மிக்க சொத்துக்களை ஈடு வைத்தும் கல்விக்காக பல சிரமங்களை சந்தித்து கல்வியை தொடர்கின்றனர்.

அத்துடன் தனியார் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் என்பவற்றின் ஊடாக யாழ்ப்பாணத்தில் இருந்து எவரும் பயனடைந்து இருக்கவில்லை. தற்போது எமது முயற்சியினால் குறித்த திட்டம் யாழ்ப்பாணத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த நிதிமூலங்களுடன் நாம் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டு தற்போது உத்தியோகபூர்வமாக 2 பேருக்கு வெளிநாட்டு கல்விக்கு செல்வதற்கான விசாவைப் பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

குறித்த கடன் திட்டத்திற்கு 13வீத வட்டி அறவிடப்படவுள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும் தலா 35 ஆயிரம் ரூபாக்களை திசைகாட்டி அறவிட முடியும். ஆனால் நாம் அறவிடவில்லை. எனினும் அதனை எமக்கு தர வேண்டாம் என்றும் அவற்றை மாணவர்களுக்கே வழங்குமாறும் தெரிவித்துள்ளோம்.

அத்துடன் இவ்வாறு கடன் திட்டத்தில் செல்லும் மாணவர்கள் உடனடியாக கடனை திருப்பித்தர தேவையில்லை. வெளிநாட்டுக்கு சென்று இரண்டு வருடங்களுக்கு வட்டிப் பணத்தை மட்டுமே செலுத்த வேண்டும். பின்னர் மிகுதிப்பணத்தை செலுத்த முடியும்.

வெளிநாட்டு கல்வியை தொடர பலர் ஆசைப்படுவார்கள். எனினும் அதற்கான வசதிகள் போதியளவு இருக்காது.

எனவே அவ்வாறான மாணவர்களுக்கு இத்திட்டம் மிகவும் வரப்பிரசாதம் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

மிருக வேள்வியை ஆலயத்தில் அனுமதி பெற்று நடத்த முடியும்

உயர்நீதிமன்றம் அறிவிப்பு

(தொடர்ச்சி)

உரிய முறையில் அனுமதி பெற்ற பின்னரே, முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயிலின் வருடாந்த மிருக வேள்வி பூஜையை நடத்த முடியும் என உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் மிருக வேள்வி பூஜை தொடர்பான வழக்கு தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் சில விதிமுறைகளை நேற்று விதித்து தீர்ப்பளித்தது.

எந்தவொரு வணக்கஸ்தலத்திலும் மிருக பலி கொடுப்பதாயின் அதற்கான அனுமதி பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக, முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் பரிபாலகர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

வீதிகளில் மின்விளக்குகளை ஒளிர வைக்குமாறு கோரிக்கை

யாழ். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட உள்ளூர் வீதிகளின் மின்விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கரணவாய் மத்தி, கரவெட்டி கிழக்கு இராஜகிராமம், இமையாணன், துன்னாலை, கோவிற்கடவை வீதி ஆகிய உள்ளூர் வீதிகளுக்கு மின்விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இரவு வேளைகளில் பயணிக்கும் பயணிகள் மிகுந்த அச்சத்துடனேயே சென்று வருகின்றனர். இதேவேளை திருடர்களின் கைவரிசை உள்ளூர் வீதிகளில் கூடுதலாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதனால் அப்பிரதேச மக்கள் வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிடம் தமது வீதிக்கு மின் விளக்குகளை பொருத்தித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	நெல்லியடி	திருநெல்வேலி	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	50	60	60
உருளைக்கிழங்கு	60	70	80	70
பச்சைமிளகாய்	120	100	130	120
தக்காளி	30	40	60	50
மரவள்ளிக்கிழங்கு	35	40	40	60
கோவா	60	60	50	80
கரட்	70	80	70	100
பூசணி	20	30	25	30
புடோல்	30	40	30	50
வாழைக்காய்	80	60	70	60
சின்ன வெங்காயம்	80	60	80	100
பெரிய வெங்காயம்	90	90	90	100
பாகற்காய்	90	80	80	80
வெண்டிக்காய்	60	60	40	80
கருணைக் கிழங்கு	90	50	60	100
பயற்றங்காய்	40	60	70	50
லீக்ஸ்	60	70	80	80
பீற்றூட்	30	60	40	50
கறிமிளகாய்	90	80	70	100
முருங்கைக்காய்	40	50	80	60
போஞ்சி	100	120	100	120
கத்தரிதம்புள்ள	30	40	40	50
கீரை - 1 பிடி	10	20	20	25
தேசிக்காய்	40-90	80	100	70
தேங்காய் (ஒன்று)	20-35	30	30	25-35
இராசவள்ளி	120	100	90	100

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 125

Search for people, places and things Nagendram Home

டொறின் மன்மதநாயகம்

மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ

என்ற கவலை உங்களுக்கு

இருக்கும் வரை

நீங்கள் நீங்களாக இருக்க முடியாது.

மற்றவர்களின் அடிமையாகத்தான்

இருந்தாக வேண்டும்.

வர்ணராஜ் ராஜ்

த்ரிஷா உனக்குத்தான்டா!



கோபல் துவா

நோக்கியா 1100 பாம்பு விளையாட்டின் தத்துவம்...

தேடித் தேடி எவ்வளவு

சேர்க்கிறாயோ,

அதனாலேயே நீ

அழிந்து விடுவாய்...!!!

மதீசன் கணேஷ்

அப்பா : செல்லம் உனக்கு யாரை ரொம்ப அதிகமாக பிடிக்கும் அப்பாவா அம்மாவா?

மகன் : ரெண்டுபேரையும்

அப்பா : இல்லை யாராவது ஒருவரை சொல்லு

மகன் : இல்ல ரெண்டு பேரும்தான்

அப்பா : சரி, இப்போ நான் சிங்கப்பூர் போறேன் – அம்மா சுவிட்சர்லாந்து போறாங்க, நீ எங்க போவாய்?

மகன் : சுவிட்சர்லாந்து

அப்பா : ஆக உனக்கு அம்மாவைத்தான் ரொம்ப பிடிக்கும்

மகன் : நோ டாட், சுவிட்சர்லாந்து இயற்கைவளம் அழகாக இருக்கும் அதான்

அப்பா : ஓ... சரி நான் சுவிட்சர்லாந்து போறேன், அம்மா சிங்கப்பூர் போறாங்க... நீ எங்க போவாய்?

மகன் : சிங்கப்பூர்

அப்பா : ஆக என்னை விட உனக்கு அம்மாவைத்தான் ரொம்ப பிடிக்கும்

மகன் : நோ டாட்

அப்பா : (கோபமாக) அப்ப என்னடா அர்த்தம்

மகன் : டாட் நீங்க என்ன லூசா, நான் தான் சுவிட்சர்லாந்து சுற்றி பார்த்துட்டு வந்துட்டேனே

அப்பா : அவ்வ்வ்வ்வ்வ்

சச்சி சங்கீத்

வயிற்றில் சுமந்ததை இடுப்பில் சுமக்க முடியவில்லையோ...?

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டினது இறைமைக்கே ஐ.நா.சவால் விடுகின்றது

அமெரிக்காவிற்கான தூதுவர் காரியவசம் சுட்டிக்காட்டு

ஜக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை கள் இலங்கையின் இறைமைக்கு சவால் விடுவதாலேயே அதனை எதிர்க்கிறோம் என அமெரிக் காவிற்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்து ள்ளார்.

நியூயோர்க் டைம்ஸின் இல ங்கை குறித்த ஆசிரிய தலைய ங்கத்திற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே இதனை தெரி வித்துள்ள அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

இலங்கையில் மனித உரிமை மற்றும் மனிதாபிமான நிலவ ரத்தை உலகின் ஏனைய பகுதிக ளுடன் ஒப்பிடுவது நேர்மையற்ற விடயமாகும். ஜக்கிய நாடுகள் விசாரணைக் குழு உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறது, அதற்கு வழங்கப்பட்ட ஆணையை மீறி அது செயற்படுவதாலேயே இதனை நாங்கள் எதிர்க்கிறோம். இது எங்கள் நாட்டின் இறைமை க்கு சவால் விடுகிறது. சர்வதேச சட்டங்களின் அடிப்படைகளை மீறுகிறது. மேலும் நல்லிணக்க த்திற்கான சூழலை பாதித்து யுத்தம் முடிந்த பின்னர் ஏற்படுத்தப்பட்டு ள்ள சமூக பொருளாதார வளர்ச் சியை குறைத்து மதிப்பிடுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் காட்டிய பிடிவாதப் போக்கு கார ணமாகவே 3 தசாப்த கால யுத் தத்தின் போது பல சமாதான முயற் சிகள் தோல்வி அடைந்தன. சர்வ தேச நிபுணர்கள் உதவியுடன் தற் போது வலுப்படுத்தப்பட்டுள்ள உள்ளூர் பொறிமுறைகள் உள் நாட்டின் சமூக கலாசார இன உணர்வுகளை மதிக்கிறது. இதற்கு மாறாக ஐ.நாவின் விசாரணை கள் வெளிநாட்டு நலன்களை அடிப் படையாகக் கொண்டவை, நாட்டின் நல்லிணக்க முயற்சிகளை பாதி க்கக் கூடியவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

சுப்பிரமணியம் சுவாமியின் கருத்து மத்திய அரசின் கருத்தாகயிருக்காது

தமிழக முதலமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்திய பிரதமருக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.

இந்தநிலையில், இந்த பிரச்சி னையை தீர்ப்பதற்கு மத்திய அரசா ங்கம் உடனடியாக தலையிட வேண டும். என்று ஜெயலலிதா கோரியு ள்ளார்.

இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் தமிழக மீனவர்களை கைதுசெய்யும் நடவடிக்கையானது மனித நேயமற்ற பயமுறுத்தும் நடவடிக்கையாகும் என்றும் கைது செய்யப்படும் மீனவர்களின் படகு கள் தடுத்துவைக்கப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்க ப்படுவதாகவும் முதலமைச்சர் சுட் டிக் காட்டியுள்ளார்.

இந்தநிலையில் தமது ஆலோச னையின்படியே இலங்கை அர சாங்கம் தமிழக மீனவர்களின் படகுகளை தடுத்து வைத்துள்ள தாக ஜனதாக்கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி வெளியிட்ட கருத்து தமிழக மக்கள் மத்தியில் குறிப்புாக மீனவ சமூகம் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஜெயலலிதா சுட்டிக்காட்டியுள் ளார்.

எனினும் இது இந்திய மத்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கருத்தாக இருக்காது என்று தாம் நம்புவதாக அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தமிழக மீனவர் கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்படுவது தமிழக அர சாங்கத்துக்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜெயல லிதா தமது கடிதத்தில் தெரிவித் துள்ளார். (இ)

புதியதொரு தொழிற்சங்கம் பொதுபல சேனாவின் கீழ்!

(கொழும்பு)

பொதுபல சேனா தலைமையில் அரச சுகாதாரத்துறைக்கான புதிய தொரு தொழிற்சங்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேர ரினால் கிருலப்பனையில் உள்ள அலுவலகத்தில் வைத்து வெளி யிடப்பட்டது.

இது தொடர்பில் நேற்று முன் தினம் கிருலப்பனையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த கலகொட அத்தே ஞானசார தேரர்,

இலங்கை சிங்கள பௌத்த நாடு. ஆனால் ஒருசில அரசியல் வாதிகள் இது பல்லினம்,பல் மதத்தவர்கள் வாழும் நாடென காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

பிரான்ஸ், ஜேர்மனி, சவுதி அரேபியா என பல நாடுகள் தமது கலாசாரத்திற்கு முதலிடத்தை வழ ங்குகின்றன. இங்குதான் மாற் றமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

ஆற்றைக் கடந்த பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது



கர்ப்பிணியாக இருந்தபோது ஆற்றை [illegible] எல்லம்மா (உள் படம்) எல்லம்மாவுக்கு [illegible] தேதி மருத்துவமனையில் பிறந்த ஆண் குழந்தை

கர்நாடக மாநிலம் யாதகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணா ஆற்றை சுமார் 120 நிமிடங்கள் நீந்தி கடந்த ஏழை பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

தன்னுடைய கணவரின் விருப் பத்தை நிறைவேற்றுவதற்காக உயிரை பணயம் வைத்து ஆற்றில் குதித்தேன் என நீச்சல் தெரியாத அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய பகுதியான நீலகண்ட நாராயணகட்டியில் மரு த்துவ வசதியோ, போக்குவரத்து வசதியோ கிடையாது. அவசர மருத்துவ தேவைக்கு அருகிலுள்ள கெக்க கேரா-விற்கு செல்ல வேண் டும்.இந்த இரு கிராமங்களுக்கும் இடையில் கிருஷ்ணா ஆறு ஓடு [illegible] மழை காலத்தில் ஆற்றை கடக்க முடியாது என்பது குறிப் பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுத்துயர் பகிர்வு

வேலாயுதர் முருகேசபிள்ளை

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் அவுஸ்தி ரேலியா Melbourne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் முருகேசபிள்ளை (Retired Audit Officer) கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.45 மணிக்கு boyd chapel springvale botanical cemetery, 600 Princes Hwy, Springvale Victoria, Australia என்னும் முகவரியில் நடைபெறும்.

பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன்



பருத்தித்துறை புலோலி கிழக்கு அரசடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் கடந்த 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு Crématorium du Père Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

ரதிதேவி வீரசிங்கம்

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ரதிதேவி வீரசிங்கம் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்ப கல் 10 மணிக்கு St John's Dixie Cemetery & Crematorium, 737 Dundas Street East, Mississauga, ON,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

சீனியன் சிவசோதி



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Harrow ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சீனியன் சிவ சோதி கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Hendon Cemetery & Crematorium,Holders Hill Road,London NW71NB, United Kingdom என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

அருணாசலம் தெய்வேந்திரன்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் தெய்வேந்திரன் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று காலை 9.45 மணிக்கு 7, Bovlevardde Menilmontant, 75011 Paris, France (metro: ligne2: Philipse Auguste) என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

விசுவர் கந்தையா சோமசுந்தரம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வைரவர் புளியங் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவர் கந்தையா சோமசுந்தரம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது தற்காலிக வசிப் பிடமான இல.21, 3 ஆம் ஒழுங்கை, வைரவர்புளியங்குளம், வவுனியா என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

திருமதி ஜெயரட்ணம் சிவனேஸ்வரி

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஜெயரட்ணம் சிவனேஸ்வரி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

செல்லத்துரை சிவலிங்கம்

வேலணை மேற்கு துறையூர் 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத் துரை சிவலிங்கம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தாழையம்பதி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

திருமதி பொன்னம்பலம் சாந்தி சறோஜினி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடா Scarbo rough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சாந்தி சறோஜினி (முன்னாள் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்) கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை அன்று கால மானார். அன்னாரின் திருப்பலி இன்று காலை 9 மணிக்கு Highland Funeral Home, 3280 sheppard Avenue East, Scarborough, ON M1T 3K3, Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

9 ஐஸ் குச்சிகளை உடைக்காமல், எந்த ஒரு புதிய ஐஸ் குச்சிகளையும் சேர்க்காமல், 10 ஆக்கி விடலாம் பாருங்கள்.

6 ஐஸ் குச்சிகளை வைத்து 4 சமபக்க முக்கோணங்களை உரு வாக்கி அசத்தலாம்.



கணக்கு

5,6 வகுப்புகளுக்குப் பொதுவானது.

ஐஸ் குச்சிகளால் புதிர் விளையாட்டு!



ஒரே ஒரு குச்சியைச் சேர்ப்பதன் மூலம், சமன்பாடு சரியாகிவிட்டது.

3 ஐஸ் குச்சிகளை உடைக்காமல், எந்த ஒரு புதிய குச்சிகளையும் சேர்க்காமல் 4 ஆக்கிவிடலாம் பாருங்கள்.

6 ஐஸ் குச்சிகளை உடைக்காமல், எந்த ஒரு புதிய குச்சிகளையும் சேர்க்காமல் இல்லை என்று ஆக்கிவிட லாம் பாருங்கள்.



இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09:2014
04

- 70 - உரோமர்களால் ஜெருசலேம் நகரில் இரண்டா வது கோயில் அழிக்கப்பட்டது.
- 1704 - ஆங்கில, டச்சுக் கூட்டுப்படைகளினால் கிப்ரால் ட்ர கைப்பற்றப்பட்டது.
- 1789 - பிரான்சில் நிலமானிய முறையை ஒழிக்க அந் நாட்டு சட்டசபை உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்தனர்.
- 1824 - ஒட்டோமான் பேரரசுக்கும் கிரேக்கர்களுக்குமிடை யில் கொஸ் என்ற இடத்தில் போர் இடம் பெற் றது.
- 1860 - இலங்கையின் கவர்னராக சேர் சார்ல்ஸ் மக் கார்த்தி நியமிக்கப்பட்டார்.
- 1902 - தேம்ஸ் ஆற்றின் கீழாக கிரீனிச் நடை சுரங்கம் அமைக்கப்பட்டது.
- 1906 - சிட்னியில் மத்திய தொடருந்து நிலையம் திறக் கப்பட்டது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மன் பெல்ஜியத் தின்மீது படையெடுத்தது. இதன் காரணமாக ஐக்கிய இராச்சியம் ஜேர்மனியின் மீது போரை அறிவித்து உலகப் போரில் முதன் முறையாக குதித்தது.
- 1916 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனியுடன் லைபீரியா போர் தொடுத்தது.
- 1936 - கிரேக்கத் தளபதி இயோனிஸ் மெட்டாக்சஸ் நாட்டின் நாடாளுமன்றத்தைக் கலைத்து தன்னை நாடின் தலைவனாக அறிவித்தான.
- 1975 - மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் ஜப்பா னிய செம்படையினர AIA கட்டிடத்தைத் தாக்கி அமெரிக்கத் தூதுவர் உட்பட 50 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். பின்னர் இப்பயணக் கைதிகளை விடுவித்து சிறைக்கைதிகளாயிருந்த தமது 5 தோழர் களுடன் லிபியா பயணமாயினர்.
- 1984 - அப்பர் வோல்ட்டா ஆபிரிக்கக் குடியரசு புர்கினா பாசோ எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1987 - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாக ரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன் முதலில் மக்கள முன் தோன்றி உரையாற்றினார்.
- 1991 - "ஓசியானோஸ்" என்ற கிரேக்க கப்பல் தென் னாபிரிக்காவில் மூழ்கியது. அனைத்து 571 பயணிகளும் காப்பாற்றப்பட்டனர்.
- 2006 - நியூசிலாந்தின் ஆளுநராக ஆனந்த் சத்தியான ந்த் அறிவிக்கப்பட்டார். இவர் ஆகஸ்ட் 23 இல் பதவியேற்றார்.
- 2007 - நாசாவின் பீனிக்ஸ் விண்கலம் செவ்வாயக் கோளை நோக்கி ஏவப்பட்டது.

பிறப்புகள்

- 1908 - ரீ. உருத்திரா, முன்னாள் கொழும்பு நகரத் தந்தை (இ.1960)
- 1961 - பராக் ஒபாமா, அமெரிக்க அரசியல்வாதி

இறப்புகள்

- 2006 - பொன். கணேசமூர்த்தி, எழுத்தாக் கலைஞர்
- 2008 - ச. அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (பி. 1929)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாசகர்களே!

சிறுவர் பகுதிக்கு உங்கள் அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் அபிப்பிராயங்களை ஆசிரியர், சிறுவர் பக்கம் வலம்புரி, இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

வறட்சியைத் துரத்துவோம்!

இந்த வருடம் என்றுமில்லாதவாறு யாழ்ப் பாணம் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் மக்கள் நீண்டதூரம் சென்று நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை. சில பிரதேசங்க ளில் திணைக்களங்களினால் விநியோகிக்கப்



படும் நீரைப் பெற்றுக்கொள்ள நீண்டநேரம் காத்துநின்று முண்டியடித்து நீரைப் பெற்றுக் கொள்கின்றனர். கால்நடைகள் நீரிற்காக அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. பரு குவதற்கு நீரின்றி பல கால்நடைகள் இறக் கின்றன. சில பிரதேசங்களில் குளங்களில் எஞ்சியுள்ள சேற்றுநீரை தாகமிகுதியால் பருகும் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு பரி தாபமாக இறக்கின்றன. அத்துடன் விவசாயி மும் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இன்னும் இரண்டு மாதங்கள் (ஒக்ரோபர் மாத இறுதிவரை) வடக்கில் தொட ர்ந்தும் வறட்சியே நிலவும் என வானிலை அவ தான நிலையம் அதிர்ச்சித் தகவலை வெளி யிட்டுள்ளது. இப்போதே இவ்வளவு வறட்சி என் றால் இன்னும் இரண்டு மாதங்களிற்கு வறட்சி யினால் ஏற்படப்போகும் தாக்கத்தை சொல் லிப் புரிய வேண்டியதில்லை. இந்நிலை நீடித் தால் நீராடுதல், உடைகள், பாத்திரங்கள் சுத்தம் செய்தல், வீடுகளை சுத்தம் செய்தல் போன்ற அன்றாட தேவைகளிற்கு நீரைப் பெற்றுக் கொள்வதே மிகப்பெரும் போராட்டமாக இருக் கப் போகின்றது.

வறட்சிக்காலத்தில் வறட்சி வறட்சி என்று சொல்லிக் கொண்டிருப்பதால் எந்தப்பயனும் ஆகப்போவதில்லை. முன்கூட்டியே நாங்கள் எடுக்கும் சில நடவடிக்கைகளால் எதிர்காலத் தில் ஏற்படும் வறட்சியை தவிர்க்கலாம் அல் லது குறைக்கலாம்.

1. மழைக் காலங்களில் கட்டாயம் ஒவ்வொரு வரும் தங்கள் வீட்டில் அல்லது காணிகளில் மழைநீர் தேங்கி நிற்பதற்கு ஆவன செய்ய வேண்டும். நாங்கள் எல்லோரும் எங்கள் வீட்டு முற்றத்தில் சிறிதளவு மழைநீர் தேங்கி நின் றாலே அதனை வாய்க்கால் வெட்டி வீதிக்கு அனுப்பி விடுவோம் அல்லது வெள்ளம் தேங் கும் பள்ள இடங்களை மண்கொண்டு மூடி மேடாக ஆக்கி விடுவோம். வீடுகளில் சேரும் மழை வெள்ளம் மழை நின்று இரண்டு அல்லது மூன்று நாட்களில் முற்றாக வற்றிவிடும். இவ் வாறு வெள்ளம் தேங்கி நிற்பது சில வேளை களில் எங்களிற்கு அசௌகரியங்களை ஏற் படுத்தலாம். ஆனால், நாங்கள் வறட்சிக்காலத் தில் நீரிற்காக அடையும் அசௌகரியங்களு டன் ஒப்பிடும்போது இது ஒரு பொருட்டே அல்ல. இவ்வாறு நீர் தேங்கி நிற்கும் அந்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் நுளம்புப் பெரு க்கமும் ஏற்படப்போவதில்லை. இவ்வாறு நீர் தேங்கி நிற்பதனால் நிலத்தடி நீர் சேமிக்கப் படுகின்றது. இதனால் எங்கள் வீட்டுக் கிணறு களில் கோடை காலத்திலும் நீரைப்பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

2. மற்றும் இப்போது வீடுகளில் முன்னு ள்ள முற்றங்களிற்கு கல் பதிக்கும் அல்லது சீமெந்தினால் நிலம் இடும் வழக்கம் அதிகரித்து ள்ளது. இதனால் எங்கள் வீடுகளிலுள்ள முற்றங்களின் அளவு குறைந்து போவதனால் மழைக் காலங்களில் நிலத்தினால் உறிஞ்சப் படும் நீரின் அளவு குறைந்து மழைநீர் வீணாக வீதிக்குச்சென்றுவிடுகின்றது. எனவே, இச்செயற் பாடுகளை தவிர்ப்பதானால் நிலத்தடி நீர் சேமிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

3.மற்றும் நாங்கள் வீடுகளில் பூமரங்களை வைத்து எவ்வளவோ நீரை இறைத்து வளர் கின்றோம். இப்பூமரங்களுடன் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு வேப்பமரம் அல்லது தேக்கு அல்லது மலைவேம்பு போன்ற பெரிதாக வளர்ந்து சூழலிற்கு மிகப்பெரிய நன்மையை எதிர்காலத்தில் வழங்கும் இத்தகைய கன்று களை வளர்த்தல். இக்கன்றுகளை வீடுகளில் அல்லது வெற்றுக் காணிகளில் நாட்டி குறை ந்தது கிழமைக்கு ஒருநாள் வீதம் நீர் பாய்ச்சி ஒரு வருடம் வளர்த்துவிட்டோம் என்றால் அதன்பின் இவ்வகை மரங்கள் தானாகவே வளர்ந்துவிடும். இவ்வாறு செய்வதனால் மரங் கள் நிறைந்த இயற்கை சமநிலை பேணப் படும் ஒரு பிரதேசமாக எங்கள் யாழ்ப்பாண த்தை மாற்றி எமது அடுத்த சந்ததியினரிடம் கையளிக்க முடியும். இவ்வாறு மரங்கள் வளர் வடைவதனால் இயற்கை சமநிலை பேணப்பட்டு மழை வீழ்ச்சி அதிகரிக்கும்.

4. அத்துடன் இப்போது இருக்கும் மரங்க ளையும் நாம் மிகவும் கவனமாக பாதுகாக்க வேண்டும். மிக மிக தவிர்க்க முடியாத அல்லது அத்தியாவசியம் எனின் மட்டுமே மரத்தை வெட்ட வேண்டும். அவ்வாறு ஒரு மரத்தை வெட்டுகின்றோம் எனின் அதற்கு பதிலாக குறைந்தது இரண்டு மரங்களையாவது புதி தாக உருவாக்க வேண்டும்.

இனி அமைச்சுக்கள் அல்லது திணைக் களங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை கள் பற்றி எடுத்து நோக்கலாம்.

1.வல்லை வெளியில் மழைக் காலங்களில் வடமராட்சி, தென் மரட்சி,* வலிகாமம் போன்ற பிர தேசங்களிலிருந்து வரும் வெள்ள நீர், ஓடிவந்து இங்கு தேங்கி நிற் கும். வெள்ளம் கூடும்போது தொண்டைம னாற்றிலுள்ள வான்கதவு மூலம் மிகை வெள் ளம் கடலிற்குள் திறந்து விடப்படும். இந்த வல்லைவெளியின் ஆழமானது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, வல்லைவெளியை கனரக வாகனங்களின் துணையுடன் ஆழப்படுத்துவதன் மூலம் அதில் சேமிக்கப்படும் வெள்ள நீரின் அளவை பெருமளவு கூட்டலாம். இதனால் மேலதிக நீர் கடலிற்குள் வீணாக திறந்துவிடப்படுதலை தவிர்க்கலாம். அத்துடன் வடமராட்சி வடக்கு போன்ற இடங்களில் கடலுடன் வீணாக கலக் கும் மழை நீரையும் பாரிய கால்வாய்கள் மூலம் திசை திருப்பி இதில் சேமிப்போமா யின், எமக்கு என்றுமே வறட்சி இருக்காது. இதனால் வருடம் முழுவதும் இதில் நீர் வற் றாது காணப்படும். இவ்வாறு நாம் ஒரு நீர்த்தேக்கத்தை உருவாக்குவோமாயின் இதனை சுற்றியுள்ள வயல்வெளிகளில் சிறு போக நெற்செய்கையும் மேற்கொள்ளக் கூடிய தாக இருக்கும். மற்றும் இவ் நீர்த்தேக்கத்தை அண்டிய பிரதேசங்களில் நிலத்தடி நீர் பெரு மளவு உயர்வதுடன் கோடை காலங்களி லும் கிணறுகள் வற்றாது காணப்படும்.

2.அத்துடன் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் குளங்களை இப்போதே ஆழப் படுத்துவதன் மூலம் மழைக்காலங்களில் கூடிய மழை நீரை சேமிக்கக்கூடியதாக இருக் கும். இதனால் இக்குளங்களை அண்டிய கிணறுகளில் கோடைக்காலங்களிலும் நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இக்குளங்களிலிருந்து கால்நடைகளும் நீரை ப்பருகக் கூடியதாக இருக்கும்.

3.மற்றும் மழைக்காலங்களில் வீட்டுக் கூரைகளிலிருந்து ஓடும் நீரை சேமித்து வைப்பதற்கு பாரிய நீர்த்தாங்கிகளை ஒவ் வொரு வீட்டிற்கும் வழங்குவதன் மூலம் அவர் கள் மழைக் காலங்களில் நீரை சேமித்து வைத்து கோடை காலங்களில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மழைக்காலங்களில் இயற்கை அன்னை எமக்கு அளிக்கும் மழை நீரில் ஒரு துளி நீரையேனும் நாம் வீணாக கடலிற்கு செல்லவிடாது சேமிப்போமா யின் எமக்கு என்றும் வசந்தகாலமே!

–ம.பகீரதன்–

ஆத்ம ஞானத்தைத் தேடி

...மனிதர்களை அவர் களின் உணவுப் பழக்கங்க ளைக் கொண்டு வகைப்படுத் தாதீர்கள். அசைவ உணவு சாப்பிடுபவர்களை அதை விட்டுவிடச் சொல்லி கட்டாயப் படுத்தாதீர்கள்.

ஒரு சின்னக் கதை...

இந்தியாவில் தொலைக்காட்சி வந்த புதிதில் பிக்ஷை எடுத்து வாழும் ஒரு மதபோதகரின் குடும்பத்தில், ஒரு தொலைக்காட்சி வாங்கி வைக்கப்ப ட்டது. ஒருவரைத் தவிர மற்ற அனை வரும் தொலைக்காட்சியைப் பார்ப்பது வழக்கம். தொலைக்காட்சி நிகழ்ச்சி களை ஒருபோதும் பார்க்காதவர், அவர்களின் தலைவர்களிடம் சென்று மற்றவர்கள் எவ்வாறு மணிக்கணக் கில் தொலைக்காட்சிமுன் அமர்ந்திருக் கின்றனர் என்று புகார் கூறுவது வழக் கம். சில தடவை புகார் செய்த பிறகு, தலைவர் அவரிடம் கூறினார். நாளை யிலிருந்து நீயும் தொலைக்காட்சி நிகழ் ச்சியைப் பார், அந்த மனிதர் அதிர்ச்சி யடைந்து அவர் ஏன் அப்படிச் சொன் னார் என்று வினவினார். அதற்குத் தலைவர் சொன்னார். தொலைக்காட் சியைத் தவிர்த்து விடுவதால்தான் நீங்கள் அவர்கள் செய்வதைப் பற்றி அதிருப்தியடைகிறீர்கள். நீங்களும் பார் க்க விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் உங்களுக்குள் அழுத்தமாக இருப்ப தால் பார்ப்பதில்லை. இவ்வாறு அட க்கி வைத்திருப்பதே உங்களை அவர்க ளுக்கு எதிராகப் புகார் கூற வைக்கிறது.

பாருங்கள். நீங்கள் அசைவத்தைத் தவிர்த்து விடுவதால் முழுவதுமாக மகிழ்ச்சியாக இல்லையென்றால் மட் டுமே, மற்றவர்களையும் சைவமாக மாறி விட வற்புறுத்துகிறீர்கள். எதையும் நீங்கள் முழுமையாகச் செய்யும்பொழுது இன்னொருவரை அதைச் செய்யும்படி நிர்ப்பந்திக்க மாட்டீர்கள். சந்தேகத்துட னும் அரைமனத்துடனும் செய்யும் பொழுது மட்டுமே, மற்றவர்களையும் அதற்குள் இழுக்கிறீர்கள். நீங்கள் எதி லாவது முழுமையாக இருக்கிறீர்களா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள இது ஒரு அளவு கோலாகும். நீங்கள் முழுமையாக இருக்கும்பொழுது வருத் தம் ஏதும் இல்லாமல் திருப்தியாக இரு ப்பதால் வேறு யாரையும் தொந்தரவு செய்ய மாட்டீர்கள். மற்றவர்களைச் சுதந்திரமாக இருக்க அனுமதிப்பீர்கள்.

உண்மையில் சைவ உணவை உண்டு

ஆன்மீகம் 07

பரமஹம்ஸ சுவாமி

விட்டு, 24 மணி நேரமும் அசைவ உண வைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு இருப்பவர்களைவிட ஒரு மணிநேரம் அசைவ உணவை உண்டுவிட்டுப் பின் மறந்துவிடுபவர்களே மேல் என்று கூறுவேன்!

ஒரு சின்னக் கதை.....

ஒரு ஜென் குரு தனது சீடருடன் நகரத்தை நோக்கி நடந்துகொண்டிருந் தார். வழியில் ஒரு ஆறு ஓடிக்கொண்டி ருந்தது. அதன்கரையில் ஒரு அழகான



பெண் நின்றுகொண்டிருந்தாள். அவர் களைக் கண்டவுடன் குருவுடன் அவள் அந்த ஆற்றைக்கடக்க உதவுமாறு கேட் டாள். குரு அவளைத் தூக்கிக்கொண்டு போய் மறு கரையில் விட்டுவிட்டுத் திரு ம்பினார். இதைக் கண்ட சீடரோ முழு வதுமாகத் தன் அமைதியை இழந்தார். அவர் கண்ட காட்சியால் உள்ளே எரிந்து கொண்டிருந்தார். நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது மேலும் பொறுக்க முடியாத சீடர் கேட்டார்: குருவே தாங்கள் எவ்வாறு ஒரு பெண் ணைத் தொட்டு தூக்கிச்செல்லலாம்? குரு பதிலளித்தார்: நான் அவளை வெகுநேரத்திற்கு முன்பே அங்கேயே விட்டுவிட்டேனே, நீ ஏன் இன்னும் அவளைச் சுமந்துகொண்டிருக்கிறாய்?

(சிரிப்பு)

குருமார்கள் எப்பொழுதுமே கேள்வி களைக் கேட்பவர்களுக்குத்தான் பதில ளிக்கிறார்களே தவிர, கேள்விகளுக்கு அல்ல. இந்தக் கதையால் குரு சீடருக்கு தன் உயர்ந்தநிலையை உணர்த்தி, அவர் துக்கி வந்தது. ஆணா அல்லது பெண்ணா என்பது ஒரு பொருட்டல்ல என்பதை விளக்கியிருக்க முடியும். ஆனால், அதை அவர் செய்யவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிசயம் ஆனால் உண்மை



விநோதமாக காட்சியளிக்கும் நீல வண்ணத்திலான குகை ஏரி

இயற்கையாகவே, யாரோ வண்ணங்கள் கொண்டு விளையாடியது போன்ற குகை ஒன்று சிலியில் அமைந்துள்ளது.

குகாஇயின் அடிப்பாகத்தில் ஓடும் பச்சை மற்றும் நீல வண்ண ஏரிகளின் பிரதிபலிப்பாலேயே இந்தக் குகை இவ்வாறு விநோதமாக காட்சி அளிக்கிறதாம்.

அண்டார்ட்டிக்கா பனியால் ஆன கண்டம் என்பதுதானே நமக்குத் தெரியும். ஆனால் அது பனிச் சிற்பங்களின் கலைக் கூடம். ஏறக்குறைய ஒவ்வொரு சிலையும் 60 அடி உயரம் வரை உள்ளன. பனி மென்மேலும் படிவதால் சிலைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த வண்ணமாகவுள்ளன.

அதிசய உலகம்

வானத்தை நோக்கி வாழையின் குலை

காசல்ரீ பிரதேசத்திலுள்ள குணதாச என்பவரின் வீட்டுத தோட்டத்தில் அதிசயமான முறையில் வாழையொன்று குலை போட்டுள்ளது.

வாழைக்குலை பூமியை நோக்கியே இருப்பது வழமை. ஆனால் மேற்படி வாழைக்குலை வானத்தை நோக்கியவாறே காணப்படுகின்றமை அதிசயமானதாகும்.

இதற்கு முன்பதாக இவ்வாறு காய்த்ததில்லையெனவும் இதுவே முதல் தடவை என தோட்டத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த வாழைக் குலையை இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தலைமுடியை இதுக்கும் நாம் பயன்படுத்த முடியும்

மனிதனின் தலைமுடியை பயன்படுத்தி ஆடைகள், போர்வைகள் என பல பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. இந்நிலையில் லித்துவேனியாவைச் சேர்ந்த கலைஞர்கள் இருவர் தலைமுடியைக்கொண்டு வயலின் இசைக் கருவி உருவாக்கி அதனை வாசித்து ஆச்சரியப்படுத்தியுள்ளனர்.

வீதி இசைக்கலைஞர்கள் தினத்தை பிரபல்யப்படுத்தும் முகமாகவே தலைமுடி வயலின் இசைக்கப்பட்டுள்ளது. டடாஸ் மக்ஸிமொவாஸ் என்பவருக்கு இந்த சிந்தனை தோன்றியுள்ளது.

இதனையடுத்து வயலின் இசைக் கலைஞரான எய்மன்டாஸ் பெலிகாஸ் என்பவரிடம் இந்த விடயத்தைக் கூறி சம்மதம் வாங்கியுள்ளார் மக்ஸிமொவாஸ். மக்ஸிமொவாஸ், தனது தலைமுடியை வயலின் நாடாவுக்கு பதிலாக பயன்படுத்த திட்டமிட்டார். ரெஸின் பதார்த்தத்தைக் கொண்டு தலைமுடியைக் கடினமாக்க அதனை வயலினில் பொருத்தி இசைக்கருவி இசைக்கப்பட்டுள்ளது.

உப்பினாலான ஹோட்டல்



பொலிவியா நாட்டில் ஹோட்டல் ஒன்று முற்று முழுதாக உப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டலின் சுவர் முதல் தளபாடங்கள் வரை அனைத்தும் உப்பு கட்டிகளைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது.

உப்பினால் வடிவமைக்கப்பட்ட மிகப் பெரிய ஹோட்டல் இதுவெனக் கூறப்படுகின்றது. இந்த ஹோட்டலினை 2 வருடங்கள் 35 தொழிலாளர்கள் மீற்றர் அளவிலான ஒரு மில்லியன் உப்புக்கற்களைப் பயன் படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

16 அறைகளைக் கொண்டுள்ள உப்பு ஹோட்டலில் குளியலறை, சாப்பாட்டு அறை மற்றும் பார் உள்ளிட்ட வசதிகளும் உண்டு.

வியக்க வைக்கும் காந்த மனிதன்



Muhibija Buljubasic எனும் 56 வயதான நபர் தன்னுள் இருக்கும் விநோத சக்தி மூலம் அனைவரது கவனத்தையும் தன்பக்கம் ஈர்த்து வருகின்றார்.

Bosina மற்றும் Herzegovina ஆகியவற்றின் நகரமாக காணப்படும் Srebenik இல் வசித்துவரும் இவர் கரண்டிகள் மற்றும் தொலைபேசிகள் என்பவற்றினை தனது உடம்பில் ஒட்ட வைத்து அசத்துவதே இதற்கு காரணம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களை சிறந்த மாணவர்களாக உருவாக்குவோம்



வி.ஞானசிங்கம்
ஆசிரியர், மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம்

மாணவர்களின் கல்வியடைவை மதிப்பிடுவதற்கு அவர்கள் பல்வேறு கட்டங்களில் முக்கிய தேர்வுகளில் பெற்ற அடைவு மட்டங்களை பரிசிலிக்க வேண்டியுள்ளது. எனினும் இன்றைய கால கட்டத்தில் தேர்வை எதிர் கொள்ளும் மாணவர்கள் மத்தியில் அதிகளவிலான குழப்பங்கள் ஏற்பட்டு திடீர் விபரீத முடிவுகளை எடுப்ப துமான ஒரு வித மனப் போக்கு உருவாகி வருவது

கல்வித் தரிசனம்

வேதனைக்குரிய விடயமாகும். எனவே தான் மாணவர்களுக்கு கற்றலில் கூடிய நாட்டத்தை ஏற்படுத்துவதற்கான காலத்தின் தேவைக் கேற்ப அவர்களை சிறந்த மாணவர்களாக உருவாக்க வேண்டியுள்ளது.

இவ்வகையில் நல்ல மாணவன் என்பவன் முதலில் நல்லிணக்கங்களையும் நற்பண்புகளையும் கொண்டிருப்பதுடன் உடையார் முன் இல்லான் போலப் பணிவுடன் கற்கும் பாங்குடையோனாகவும் மறுபுறத்தில் நிறைய மதிப்பெண்களைப் பெற்றுக் கல்வியால் சிறந்து விளங்குபவனாயுமிருக்க வேண்டும் என்ற இரு வேறுபட்ட கருத்துக்களுண்டு. உளவியலாளர்களின் ஆய்வு முடிவுகளின் பிரகாரம் நுண்ணறிவுக்கும் தேர்வில் வெற்றி பெறுவதற்கும் நேரிடைத் தொடர்புகளேயுள்ளன.

ஆனால் நுண்ணறிவு கூடிய மாணவர்கள் குறைவான மதிப்பெண்களைப் பெற்றுத் தோல்வி அடைகின்றமையானது எமது தாயகத்தில் இன்று காணக்கூடியதாகவேயுள்ளது. இதற்கான காரணங்களை ஆராயும் போது மாணவனின் ஊக்கமின்மை, ஆர்வமின்மை, பெற்றோர்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலை, சமூக அந்தஸ்து, படிக்கும் பழக்கமின்மை, கவனக்குறைவு போன்றவை வெளிப்படுகின்றன.

எனினும் இதற்கும் விதிவிலக்காக குடும்பப் பிரச்சினைகள், பணப்பற்றாக் குறை, மனவெழுச்சிப் போராட்டங்களினால் பாதிக்கப்பட்ட அநேக மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்று முதல் நிலையில் வகுப்பில் திகழ்வதையும் அதே சூழலில் தான் எம்மால் காணமுடிகின்றது. இந்நிலையில் நல்ல மாணவன் எனும் போது வள்ளுவரின் கருத்துப்படியாயினும் சரி உளவியலடிப்படையிலாயினும் சரி கூர்மையான அறிவுடன் நன்மக்கள் பண்பும் ஒழுக்கமும் உடையவனே அவன் எனப் பொருள்படுகின்றது.

பாடசாலை எனும் சமூக நிறுவனத்தில் ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே மாணவர்களைச் சிறந்தவர்களாக உருவாக்க முடியும். ஏனெனில் ஒரு மாணவனுடைய இரண்டாவது பெற்றோர் என்ற நிலையில் ஆசிரியரும் முதலாவது ஆசிரியர் என்ற நிலையில் பெற்றோரும் விளங்குவதாகும். உதாரணமாக ஒரு மாணவனிடம் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லை என வைத்துக் கொள்வோம். அதற்காக அவனைக் கற்கவைப்பது சிரமம் என்று நினைப்பது தான் தவறு. ஏனெனில் அம் மாணவனுக்கு கல்வியினால் பெறப்படும் நற்பலன்களையும் ஒளிமயமான எதிர்கால வாழ்வின் நம்பிக்கைகளையும் புரியவைப்பதன் மூலம் அவனைப் படிப்பில் ஆர்வமடையச் செய்யலாம்.

இதனைத் துறைசார் ஆசிரியர்கள் மட்டுமின்றி குறிப்பாக பிள்ளையின் முதல் ஆசிரியர்களாகிய பெற்றோர்களும் அழுத்திச் சொல்ல வேண்டும். மாணவர்கள் மீது இவனால் இயலாது என்ற முத்திரையைக் குத்தாமல் முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதை



ஏற்படாவண்ணம் தீர் மானிப்பதே மிகப்பொருத்தமானதாகும். அத்துடன் அதிபர், ஆசிரியர்களின் அவதானிப்புக்குட்பட்ட இடமாக இருப் பதும் விரும்பத்தக்கதாகும்.

அடுத்து மாணவன் சார்பாக பின்பற்றவேண்டிய விடயங்களாக,

1.கற்பதில் ஒருமித்த கவனம் செலுத்துதல்

இவ்விடயம் எவருடன் எவ்விதம் தொடர்பு வருகிறது யாருக்குத்தேவை? என வினா எழுப்பும்போது படிப்பின் போது பகற்கனவு காண்போர், ஆர்வமில்லாதோர், வேண்டா வெறுப்புடனும் அக்கறையின்றியும் கற்போர் ஆகியோருக்கே அது தேவை எனப் புலப்படுகிறது. எனவே இவர்களின் கவனச் சிதறல்களைக் கட்டுப்படுத்தும் சில செயற்பாடுகளை மேற் கொள்வதன் மூலம் இக்குறையைப் போக்கலாம்.

2.கால அட்டவணை தயாரித்தல்

தினமும் குறிப்பிட்ட நேரம் எப்பாடத்தை எவ்வளவு நேரம் படிப்பது எனத் திட்டமிடல் இதிலடங்கும். இதன் மூலம் தேர்வுக்கு இன்னும் எவ்வளவு காலமுள்ளது எனக்கூறி கடைசிவரை தள்ளிப்போடுவதையும் குறிப்பிட்ட பாடத்தை அல்லது தான் விரும்பியதோர் பாடத்தை மட்டும் உள்ளடக்கிக் கற்பதையும் தவிர்க்கமுடிகின்றது.

3.படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தல்

படிக்கும் பாடத்தைப் பிரித்துப் பொருளுடைய பகுதிகளாகக் கொண்டு விளக்கத்துடன் படிப்பது இவ் விடயத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடுவதுடன் அவற்றை ஞாபகப் படுத்தும் நோக்கில் ஒரே கற்றல் மட்டங்களிலுள்ளோர் கூட்டு க்கற்றலிலும் ஈடுபடுவது பயன்மிக்கதாகும்.

4.குறிப்புப் புத்தகம் (Note Book) தயார் செய்தல்

படிக்கும்போது குறிப்புக்களை எடுத்து வைத்திருப்பின் அவ்விடயங்கள் தேர்வுக்கு முன் மனதில் மீட்டுக் கொள்வது இலகுவானதாக அமையும்.

5.தெளிவான கையெழுத்தில் எழுதுதல்

தேர்வுத் தாளை திருத்துபவரின் மனநிலையைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகத் தெளிவான கையெழுத்தும் விளங்குவதால் இதையும் கருத்திற்கொள்ளவேண்டியுள்ளது. இங்கு பின்வரும் படி முறைகளை விளங்கிக் கொள்ளல் ஏற்புடையதாகும்.

✦ வினாக்களை நன்கு கருத்துணர வாசித்தல்

✦ எழுதும்முன்பாக எதை எழுதப்போகின்றோம் எனச் சிந்தித்தல்

✦ நாம் எழுதும் கருத்துக்களுக்கும் பதிலுக்கும் ஆதாரம் உண்டா என மனக்கண் முன் நிறுத்துதல்

✦ புள்ளித்திட்டமிடலுக்கேற்ற விதத்தில் விடையை எழுதுதல்.

6.நினைவிற் கொள்ளுதல்

படிக்கும் முறையைச் செம்மையாக்கிக் கொள்வதற்கும் இடையிடையே அவற்றை மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுதல் இன்றியமையாததாகும். நினைவாற்றலை பின்வரும் முறைகளில் வளர்க்கலாம் எனக் கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

✦PQ முறை

இங்கு P-Preview- முன்னோட்டம்

Q-Question- படிக்கும் போது நாமே வினாக் கேட்டல்

✦4R முறை

Read- படித்தல்

Reflect- எண்ணிப்பார்த்தல்

Recite- திரும்பக் கூறிப்பார்த்தல்

Review- மறுமுறை படித்தல்

எனவே மேற்குறித்த விடயங்களை மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவற்றை நடைமுறையில் கைக்கொள்வதனூடாகவும் துறைசார்ந்த யாவரும் அவர்களைத் தேர்வை நோக்கி வழிப்படுத்துவதனூடாகவும் எதிர்கொள்ளும் சவால்களிலிருந்தும் விபரீத முடிவுகளிலிருந்தும் அவர்கள் விடுபட உதவுவதுடன் இன்றைய உலகின் தேவைக்கேற்ற சிறந்த பிரஜைகளாகவும் உருவாக்க முடியும்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல்- பாலஸ்தீனப் பிரச்சினையும் ஹமாஸ் பயங்கரவாதமும்!

...உலகிலேயே முதன் முதலில் தற்கொலை தாக்குதல் என்ற உத்தியை கையாண்டவர்கள் ஹமாஸ் அமைப்பினர். இது ஹமாஸின் பொறுப்பாளராக இருந்த ஷேக் அகமது யாசின் என்பவனின் சிந்தனையில் உதித்தது.

hamas-vid இஸ்ரேலிய இலக்குகள் எது எப்போது கண்ணில் பட்டாலும், உடனடியாகத் தாக்கப்படும், தகர்க்கப்படும். இஸ்ரேலிய கருவுலங்கள், மிகப் பெரிய வர்த்தக நிறுவனங்கள் என்று எதையும் விட்டு வைக்க மாட்டார்கள், தாக்குவதோடு இல்லாமல், அதை தரைமட்டமாக அழித்த பின்னர்தான் ஹமாஸ் இயக்கத்தினர் அமைதியடைவார்கள். கை வெடிகுண்டு, கார்வெடிகுண்டு, சூட்கேஸ் வெடிகுண்டு போன்றயுத்திகளை கண்டு பிடித்தவர்கள் ஹமாஸ் இயக்கத்தினர் என்றால் அது மிகையாகாது.

ஹமாஸின் செயற்பாடு பற்றி ஒரு பத்திரிக்கையாளர் கூறிய கருத்து முக்கியமானது, "எங்களுக்கு இஸ்ரேலியப் பொது மக்கள், இஸ்ரேலிய ராணுவம் என்ற பாகுபாடு எல்லாம் கிடையாது." இஸ்ரேலிய அரசு ஒவ்வொரு இஸ்ரேலிய குடிமகனும் ஒரு வருடம் கட்டாயம்மாக இராணுவ பயிற்சி பெற வேண்டும் என சட்டம் இருக்கும்போது, சிவிலியன் என்பதே தவறு, அனைத்து இஸ்ரேலியரகளும் இராணுவத்தினர்என்பதைமறந்துவிக்கூடாது.

1994 இல் கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்வது, மதத்திற்காக உயிர் கொடுப்பது, நாடு விடுதலை பெற வேண்டும் என்பதற்காக உயிர் கொடுப்பது, என்ற பழைய சித்தாந்திறகு ஒரு புதிய நெறிமுறைகளை உருவாக்கியதால் ஏற்பட்டது தற்கொலைப்படை. இதுகூட உடனடியாக சிந்திக்கவில்லை, ஹெப்ரான் என்கிற இடத்தில் இப்ராஹிம் மசூதியில் தொழுகை நடந்துகொண்டிருந்தபோது, இஸ்ரேலிய பரூஷ் கோல்ட்ஸ்டெயின் என்பவரால், 29 அரபியர்கள் தொழுகையின்போது சுட்டுக்கொன்ற சம்பவத்தினால் ஏற்பட்ட சிந்தனையே தற்கொலைப் படையாகும். .

ஹாமஸ் துவங்கப்பட்டபோது, அதன் நோக்கம் தெளிவாக சொல்லப்பட்டது. (1) மேற்குக் கரை, காஸா உட்பட இஸ்ரேலின் வசம் இருக்கும் பாலஸ்தீனிய நிலப்பரப்பு முழுவதையும் வென்றெடுப்பது, இஸ்ரேலை இருந்த இடம் தெரியாமல் அழித்தொழிப்பது. (2) தப்பித்தவறி பாலஸ்தீனம் என்றாவது ஒரு நாள் மதச்சார்பற்ற தனியொரு தேசமாக அறியப்பட வேண்டி வருமானால், அதை எதிர்த்தும் போராடுவது, பாலஸ்தீனை ஒரு முழுமையான இஸ்லாமிய தேசமாக மாற்றுவது. இந்த இரண்டு நோக்கங்களின் மூலம் ஹமாஸ் வெளி உலகிற்கு சொல்ல வேண்டியதை தெளிவாக தெரிவித்துள்ளது. அதாவது, பாலஸ்தீனத்தில் இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டு வருவதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வோம் என சூழுரைத்தார்கள்.

பாலஸ்தீனயர்களுக்கு ஆதரவாகவே இஸ்லாமிய நாடுகள் இருப்பதாக கூறுவதும் தவறான தகவலாகும். இஸ்ரேலுடன் சுமூக உறவு கொண்ட முஸ்லீம் நாடுகள் உள்ளன. ஜோர்டான் பகிரங்கமாகவே இஸ்ரேலை ஆதரித்தது. மறைமுகமாக சவுதிஅரேபிய இஸ்ரோலுடன் இருந்தது. சவுதி மன்னர் அப்துல்லாவின் மைத்துனர் துருக்கி நாட்டின் புலனாய்வுத் துறைக்கு பொறுப்பாக இருப்பவர். அவர் பெல்ஜியம் நாட்டிற்கு சென்றபோது, இஸ்ரேலிய ஜெனரல் ஆமோஸ் யால்டின (Amos Yadin) என்பவரை சந்தித்து பேசியுள்ளார். இவர்களின் பேச்சில் ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக் கட்டுவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

ஹமாஸ், பாலஸ்தீனியர்களுக்கு பாதுகாவலராக மாறிய கதை தனிக் கதை. யாசர் அராபாத் பாலஸ்தீனத்தின் பாதுகாப்பாளராக கோலேச்சியபோது எங்கே ஹமாஸ் முளைத்தது என்பதும் புரியாத புதிராகவே இன்றுவரை இருக்கிறது. ஆனால் உண்மையில் யாசர் அராபாத் இஸ்ரேலுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை ரத்துச் செய்ய வேண்டும் என குரல் கொடுத்தவர்கள் ஹமாஸ் இயக்கத்தினர.

முரணபாடான கருத்து ஒன்று உள்ளது, பாலஸ்தீனியர்களுக்கு உதவி புரிவதும் ஹமாஸ் இயக்கத்தினர், மனிதாபிமான முறையில் உதவி புரியும் ஹமாஸ் இயக்கத்தினர், இஸ்ரேலியர்களை கொல்லுவதும் தங்களது ஜிகாத் என கூறுவது புரியாத புதிராகும். பாலஸ்தீன அதிபர் யாசர் அரஃபத் இறந்த பின்னர், ஹமாஸ் இயக்கத்தினர் தனது ஆயுதப் போராட்டத்தை முன்னைக் காட்டிலும் பன்மடங்கு தீவிரப்படுத்த முடிவு செய்தார்கள்.

1860 ஆம் ஆண்டு ஐ.நா. சபை ஒப்பந்தப்படியும், ஓஸ்லே உடன்படிக்கையின்படி காஸா பாலஸ்தீனத்தின் பகுதியாக அறிவிக்கப்பட்டது. சன்னி முஸ்லீம்கள் அதிகளவில வாழும் பகுதி காஸா ஸ்டிரிப் என்பதாகும். பாலஸ்தீனத்திற்கு உட்பட்ட காஸா ஸ்டிரப் பகுதி எகிப்தின் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது, பின்னர் ஐக்கிய அரபு குடியரசுடன் இணைக்கப்பட்டது. 1967 இல் நடந்த ஆறு நாள் யுத்ததித்தின் காரணமாக காஸா ஸ்டிரப் பகுதி இஸ்ரேல் வசம் மாறிவிட்டது. 2005 இல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி மீணடும் காஸா பகுதி பாலஸதீனத்திற்கு வழங்கப்பட்டது. 2006 மற்றும் 2007இல் பாலஸ்தீனத்தில் நடநத சட்டமன்ற தேர்தலின் காரணமாக ஹமாஸ் பெருவாரியான இடங்களில் வெற்றி பெற்று காஸா ஸ்டிரப் பகுதியில் ஆட்சி செய்தார்கள்.

ஹமாஸ் அமைப்பிலுள்ள இராணுவத்தின் பெயர் அல்காஸம் படை என்பதாகும். இதற்கும் முக்கிய காரணம் உண்டு. ஹமாஸ் ஏற்படுத்துவதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே பாலஸ்தீனியர்களுக்குப் போர் பயிற்சி யளித்த ஷேக் இஜ் அல்தின் அல்காஸம் என்பவரின் நினைவாகவே, ஹமாஸ் தனது இராணுவத்திற்கு பெயர் சூட்டியது. ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு என்பதற்கு அவர்களின் அமைப்பே உதாரணமாகும். ஹமாஸின் சில பிரிவுகள் வன்முறைப்பிரிவு, தாக்குதல் பிரிவு இந்த இரண்டு பிரிவுகளும் வன்முறையை தூண்டி, அதன் மூலமாக இஸ்ரேலியர்களை தாக்குவது என்று முறைப்படுத்தப்பட்ட பிரிவு.

ஹமாஸ்க்கு நிதி கிடைக்கும் வழி

ஒரு பயங்கரவாத இயக்கத்திற்கு நிதி அதிக அளவில் தேவைபடுகிறது. துப்பாக்கி தூக்குவதற்கும், கார் வெடி குண்டுகள், சொந்த ராக்கெட் என அதிநவீனத் தாக்குதல்களை தொடர்ந்து நடத்துவதற்கு அதிக அளவில் நிதி தேவைப்படுகிறது. மற்ற பாலஸ்தீன இயக்கங்களுடன் ஒப்பிடும்போது, ஹமாஸ் பணவிடயத்தில் எப்போதுமே பலமாகவே இருந்து வருகிறது. உள்நாடுகளில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் ஹமாஸ் இயக்கத்தின் செயற்பாடுகளுக்காக நன்கொடை திரட்டுவதை ஆரம்ப காலம் முதலே அதிக கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக அரபு நாடுகள் அதிக அளவில் நன்கொடைகள் வழங்குகிறார்கள். உலகம் முழுவதும் உள்ள தொண்டு நிறுவனங்களும் ஹமாஸ்க்கு நிதி வழங்குகிறது.

பதினொரு வழிகளில் ஹமாஸ்க்கு தேவையான நிதி ஆதராங்கள் கிடைத்துக் கொண்டிருப்பதாக பல்வேறு நாடுகளிலுள்ள உளவுத் துறையினர் தெரிவிக்கிறார்கள். சிரியா ஆதரவு, மத்தியக் கிழக்கு நாடுகளில் செயற்பாடுகள், ஹமாஸின் நிதி உதவி அமைப்புகள், தாவா- தீவிரவாதம், பாலஸ்தீனியர்களிடமிருந்து திரட்டும் உதவிகள், மேற்கத்திய நாடுகள் வழங்கும் நன்கொடைகள், பிரிட்டன் ஐரோப்பா போன்ற நாடுகளிலுள்ள பாலஸ்தீனர்கள் வழங்கும் நிதி, ஆசியா மற்றும் ஆப்ரிக்கா கண்டங்களிலுள்ள இஸ்லாமிய அமைப்புகள், வெளிநாடுகளிலிருந்து ஆள் சேர்ப்பது, வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பின் முழு ஆதரவு, குறிப்பாக கூறவேண்டுமானால், அல்கொய்தா அமைப்பினர் ஹமாஸ்க்கு நிதி கொடுக்க தயங்குவது கிடையாது.

ஹமாஸின் நிதியானது பெரும்பகுதி வளைகுடா நாடுகளில் உள்ள பல்வேறு தொண்டு அமைப்புகள், இஸ்லாமிய அமைப்புகள் மூலமாகவே வருவதாக கூறப்படுகிறது. வருடந்தோறும் ஹமாஸ் திரட்டும் நிதியின் அளவு பல மில்லியன் டொலர்கள். ஆண்டுக்கு 200 மில்லியன் டொலராக இருக்கலாம் என்கிறார்கள்.

இதில் பெரும் பகுதி சவுதி அரேபியாவிலிருந்து வருகிறது. சவுதி அரேபியாவிலிருந்து கிடைக்கும் நிதியின் அளவு ஆண்டு ஒன்றுக்கு 12 மில்லியன் டொலருக்கு மேல் இருக்கலாம் என்கிறார்கள். அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் ஹமாஸ் இயக்கத்திற்கு நன்கொடை வசூலிக்கும் பாலஸ்தீனர்களின் தலைமையில் இயங்கும் அமைப்புகள் பொது மக்களிடம் நிதி வசூலிப்பது தங்களின் கடமை என கருதி செயற்படுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள நிறுவனத்தின் பெயர் The Holyland Foundation). பிரட்டனிலுள்ள தொண்டு அமைப்பின் பெயர், இன்டர்பால் (Interpal) பாலஸ்தீன மீட்பு, வளர்ச்சி நிதி நிறுவனம் (The Palestine Relief and Development). என்றும், அல் அக்ஸா அறக்கட்டளை இந்த அமைப்பிற்கு இப்பெயர் வரக் காரணம், ஜெருசலேம் நகரில் புகழ்பெற்ற குன்றுக் கோபுரத்துடன் இணைநத மசூதியின் பெயர். இந்த மசூதியின் பெயரில் இயங்கும் அறக்கட்டளை. இந்த அறக்கட்டளை ஜேர்மனி, டென்மார்க், பெல்ஜியம், ஹாலந்து போன்ற நாடுகளில் உள்ளது. .

ஆகவே, இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சினையில் ஹமாஸ் என்ற பயங்கரவாத இயக்கம் முனைப்புடன் இருப்பதால், பிரச்சினைக்கு தீர்வு கான இயலாத நிலையில் இரு நாடுகளும் இருக்கின்றன. இந்தியாவில் இந்திய முஸ்லீம்களும், இந்திய முஸ்லீம்களுக்கு தலைமை தாங்கும் தலைவர்களும், முஸ்லீம்களின் ஓட்டுக்களை பெறதுடிக்கும் கட்சிகளும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக குரல் கொடுப்பதும், இஸ்ரேலுக்கு எதிராக பெரிய கூக்குரல் எழுப்புகிறார்கள். ஆனால் இவ்வாறு கூச்சல் போடும் இஸ்லாமியர்கள், முஸ்லீம்களுக்கு ஆதரவான அரசியல் கட்சிகள் இதுவரை, சிரியாவில் 1,50,000 சன்னி முஸ்லீம்கள் சியா முஸ்லீம்களால் படுகொலை செய்யப்பட்டது இவர்கள் கணகளில் படவில்லை. டார்பரில் கருப்பின முஸ்லீம்கள் அரபு முஸ்லீம்களால் லட்சக் கணக்கில் கொல்லப்பட்டது, இந்திய அரசியல்வாதிகள், இடதுசாரிகளின் கண்களில் தென்படவில்லை. அல்கொய்தா பயங்கரவாத இயக்கம், ஷியா பிரிவினர் மீது நடத்திக்கொண்டிருக்கும் இனப்படுகொலைகளை இவர்கள் கண்டுகொள்ளவில்லை. நைஜீரியாவில் போகோ ஹாரம் என்ற பயங்கரவாத அமைபபு, ஆயிரக்கணக்கான கிறிஸ்தவரகளை கொல்வதும், பள்ளிச் சிறுமிகளை அடிமைகளாக்க முனைவதும் இவர்களில் எவர் கண்ணிலும் படவில்லை. -இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸை கட்டுப்படுத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையருக்கு வேண்டும்

இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

பொலிஸாரைக் கட்டுப்படுத்தும்அதிகாரம் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிற்கு இருக்க வேண்டுமென இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் பேச்சுவார்த்தை நடத்தி, தேர்தல் கடமைகளில் பொலிஸாரிரை ஈடுபடுத்துவது குறித்த பொறிமுறைமை ஒன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உத்தரவுகளை பிறப்பிக்கக் கூடிய வகையிலான ஓர் பொறிமுறைமை அவசியமாகின்றது என சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான ஓர் நிலைமை இருந்தால் மட்டுமே சட்டம் ஒழுங்கை அமுல்படுத்த முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை அமுல்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும் என தெரிவித்துள்ளது.

தேர்தல் காலங்களில் பொலிஸாரை கட்டுப்படுத்தக் கூடிய வகையில் ஒழுங்குகளை செய்ய வேண்டியது அவசியமாகும் என குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் கடமையில் ஈடுபட்டு வரும் அரசாங்க அதிகாரிகள் பக்கச்சார்பாக செயற்படக் கூடாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

இந்தியா செல்வதாயின் விக்னேஸ்வரன் இலங்கை அரசிற்கு அறிவிக்க வேண்டும்



இந்தியாவின் அழைப்பையேற்று வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் இந்தியா செல்வதாயின் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கவேண்டியது அவசியமாகும் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சியை சேர்ந்தவராக இருப்பினும் நாட்டின் அரசியலமைப்புக்கு ஏற்பவே விக்னேஸ்வரன் வட மாகாணத்துக்கு முதலமைச்சராக இருக்கின்றார். எனவே அவர் அரசியலமைப்புக்கு ஏற்பவே செயற்படவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வட மாகாண சபை முதலமைச்சராக இருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் ஓய்வுபெற்ற நீதியரசர். எனவே சட்டம் பற்றியும் அரசியலமைப்பை பின்பற்றவேண்டிய தேவை குறித்தும் அவருக்கு நன்றாக தெரியும் என்றும் அவர் தெரிவித்தார்

வட மாகாண முதலமைச்சரை இந்தியா அழைத்து பேச்சு நடத்த வுள்ளதாக வெளிவரும் தகவல்கள் தொடர்பிலும் கூட்டமைப்பை இந்தியா அழைத்து பேசியமை தொடர்பிலும் அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் உள்ள அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், முதலமைச்சர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் அரசியலமைப்பின் கீழேயே வருகின்றனர். முதலமைச்சர்களாக பதவி வகிக்கின்ற அனைவரும் அரசியலமைப்புக்கு அமைவாகவே செயற்பட வேண்டும். எதிர்க்கட்சியின் சார்பில் ஒரு மாகாணத்தில் முதலமைச்சராக ஒருவர் இருந்தாலும் அவர் அரசியலமைப்புக்கு உட்பட்டே செயற்பட வேண்டும். அரசியலமைப்பை மீறி யாரும் செயற்பட முடியாது. அது மட்டுமன்றி நிதி மற்றும் நிர்வாக விடயங்களும் அரசியலமைப்புக்கு உட்பட்டே இடம்பெறவேண்டும்.

இந்நிலையில் அமைச்சர் ஒருவரோ அல்லது பிரதியமைச்சர் ஒருவரோ மாகாண முதலமைச்சரோ வெளிநாடு செல்ல வேண்டுமாயின் அது குறித்து அரசாங்கத்துக்கு அறிவிக்கவேண்டும். இது சம்பிரதாயமாகும். இவ்வாறு அறிவித்துவிட்டு சென்றால்தான் தூதரக மட்டங்களில் உரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

கூட்டமைப்பின் இந்திய விஜயம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் அரசாங்கத்துக்கு தோல்வி என்று கூறப்படுவதை ஏற்க முடியாது. இந்த விடயத்தை வெற்றி,தோல்வி என்ற வகையில் நாங்கள் பார்க்கவில்லை. அதுமட்டுமன்றி கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பில் அரசாங்கம் அலட்டிக்கொள்ளவுமில்லை.

காரணம் அவ்வப்போது இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு சென்று கூட்டமைப்பு பொய்களை கூறிவரும் என்பது எம் அனைவருக்கும் தெரியும். எனவே இது தொடர்பில் அலட்டிக்கொள்ள தேவையில்லை.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான இந்தியாவின் சந்திப்பு தொடர்பில் அரசாங்கம் வெட்கப்படவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஜக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் தினேஷ் குணவர்த்தன , அரசாங்கம் வெட்கப்படவேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஜக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு தமிழ்த் தலைவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்து சந்திப்புக்களை நடத்தியிருந்தார்கள். எனவே இது அலட்டிக் கொள்ளவேண்டிய விடயமல்ல. மற்றும் இந்த விடயத்தில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

26,000 அரச அதிகாரிகள் தேர்தல் பிரசாரப் பணியில்

ஊவா மாகாண சபை தேர்தல் பிரசாரங்களுக்காக 26ஆயிரம் அரசாங்க பணியாளர்கள் பயன்படுத்தப்படுவதை தேர்தல்கள் ஆணையாளர் கட்டுப்படுத்த வேண்டும் என ஜே.வி.பி.கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணையகத்தில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திவிநெகும திட்டத்தின் 26 ஆயிரம் பணியாளர்களையும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களையும் தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்த அரசாங்கம் தயாராகி வருகிறது.இதனை தடுக்க தேர்தல்கள் ஆணையாளர் இயலாமையை காட்டி வருகிறார்.

இந்தநிலையில் குறித்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிடவேண்டும்என்று ஜே.வி.பி தனது மனுவில் குறிப்பிட்டுளளது.

ஊவா மாகாணசபை தேர்தல் களத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதாக, ஜே.வி.பியின் வேட்பாளர் சுதத் பலகல்ல தெரிவித்தார்.

மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாட்டை செய்த பின்னர் இந்த குற்றச்சாட்டை முன் வைத்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

பிறருக்காக

கனாதர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் உபதேசம் பெறுவதற்காக பலர் வருவதுண்டு.

ஒரு நாள் அவரைத்தேடி நான்கு பேர் வந்தார்கள். முனிவர் அவர்களைப் பார்த்து "நாளைக்குக் காலையில் சூரியன் உதயமாகும் சமயத்தில் இங்கே வாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மறுபடியும் அடுத்தநாள் காலையில் அவர்கள் வந்தார்கள். அந்த சமயத்தில் முனிவர் யாகம் செய்து கொண்டிருந்தார். வந்த நான்குபேரும் அவருக்கு உதவி செய்ய ஆரம்பித்தார்கள்.

யாகம் முடிவதற்கு அதிக நேரம் ஆகிவிட்டபடியினால் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வரலாம் என்று நினைத்து புறப்பட்டார்கள்.

இதைக்கண்ட முனிவர் அவர்களைத் தடுத்து, "நீங்கள் உடனே ஆச்சிரமத்துக்குப் போங்கள். அங்கேயே உங்கள் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்றார்.

இதைக் கேட்டவுடன் அவர்கள் ஆச்சிரமத்துக்குப் போனார்கள்.அங்கே ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதில் கை, கால் கழுவிவிட்டு உள்ளே நுழையப் போனார்கள்.

அந்த சமயம் பார்த்து, நான்கு முரடர்கள் அவர்கள் முன்வந்து "இங்கு சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியமம் உண்டு. இதோ இந்த மூங்கில் கம்புகளை உங்கள் கைகளில் கட்டி விடுவோம்.

அதற்கு நீங்கள் சம்மதிக்கவில்லையானால் உங்களை கொன்று விடுவோம்" என்று பயமுறுத்தி அவர்களின் கையை நீட்டச் சொல்லி முழங்கையை மடக்க முடியாதவாறு மூங்கில் கம்புகளை வைத்து கட்டினார்கள்.

இவர்களுக்கு நீட்டிய கையை மடக்க முடியவில்லை. அப்படியே உள்ளே போய் நான்கு இலைகளுக்கும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தனர். இருந்தாலும் சப்பிட முடியவில்லை.

இந்த சமயத்தில் முனிவர் உள்ளே வந்தார். "ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்? கூச்சப்படாமல் சாப்பிடுங்கள்" என்றார். இவர்களுக்கோ எரிச்சல் எரிச்சலாக வந்தது.

முனிவர் சிரித்துக்கொண்டே அவர்களைப் பார்த்து, "உங்கள் கையிலுள்ள ஆகாரம் உங்கள் வாய்க்குத் தான் போக வேண்டும் என்று அவசியமில்லை. எதிரில் உட்கார்ந்திருப்பவர் வாய்க்கும் போகலாமே! அதே மாதிரி எதிரில் உட்கார்ந்திருப்பவர் கையில் இருக்கும் ஆகாரம் உங்கள் வாய்க்கும் போகலாமே!" என்றார்.

அப்பொழுதுதான் இவர்களுக்குப் புத்திவந்தது. முழங்கையை மடக்க முடியாமல் கட்டியிருந்தாலும் அடுத்தவன் உண்பதற்கு அது உபயோகப்படுமே! என்பது புரிந்தது.

பிறகு முனிவர், "உங்களுக்குப் பாடம் கற்பிக்கவே இப்படிச் செய்தேன். நாம் சம்பாதிக்கும் பணம் நமக்குத் தான் பயன்படவேண்டும் என்பதில்லை. மாறாக அது மற்றவர்களுக்கும் உபயோகப்படலாம். ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதுதான் வாழ்க்கை.

அதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி முழங்கையைக்கட்டி உங்களை சாப்பாட்டுக்கு முன் உட்காரவைத்தேன்" என்றார் முனிவர்.

இதை ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கும் நம்ம ஆள் ஒருவரிடம் சொன்னேன்.

அதற்கு அவர், "சார்... எனக்கெல்லாம் கையில் மூங்கில் கம்பு வைத்து கட்ட வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை.

ஏனென்றால் நான் சாதாரணமாக முழங்கையை மடக்க வேண்டிய சந்தர்ப்பமே வருவதில்லை!" என்றார்.

"அது எப்படி?" என்று கேட்டேன். "நான் எப்பொழுதும் அடுத்தவர்கள் பையில் இருக்கிற பணத்தைத் தான் எடுக்கிறது வழக்கம்" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

333 ஏக்கர் தரிசு நிலக்காணிகள் விவசாயத்திற்கு வழங்கப்படவுள்ளன

(மல்லாவி)

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின்நிதிஅனுசரணையுடனும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் துணுக்காய், பாண்டியன்குளம், ஒலுமடு ஆகிய இடங்களிலுள்ள கமநல சேவை நிலையங்களின் கீழ் 30 வருடங்களுக்கு முன் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வன்னி யுத்தம் காரணமாக கைவிடப்பட்டுள்ள 333 ஏக்கர் தரிசு நில காணிகளின் பற்றைக் காடுகள் துப்புரவு செய்யப்பட்டு 218 விவசாயக் குடும்பங்களிடம் கையளிக்கப் படவுள்ளதாக மேற்படி கமநலசேவைநிலையங்களின்கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூறுகையில்,

கடந்த 30 வருடங்களுக்கு முன் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பல ஆயிரக்கணக்கான விவசாயக் காணிகள் பற்றைகளால் சூழப் பட்டுள்ளன.

தற்போது விவசாயிகள் விவசாய நடவடிக்கையை மேற் கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆயினும் அவர்களது தற் போதைய பொருளாதார நிலையில் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளதால் பற்றைக் காடுகளை துப்புரவு செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது.

இதனைகருத்தில்கொண்டு கமநல அபிவிருத்தித்திணைக்களத்தினால் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட திட்டம் ஒன்றிற்கு அமைவாகவே உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரம் தரிசு நிலக்காணிகள் அழிக்கப்பட்டு அவை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

இதன் ஒரு பகுதியாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் திருநகர் கிராம கமக்கார அமைப்பிற்குட்பட்ட வவுனிக்குளத்தின் இடது கரை நீர்ப்பாசன கால்வாயின் கீழுள்ள 12 ஆம் , 14 ஆம், 15 ஆம் நீர்ப்பாசனக் கால்வாய்களின் கீழுள்ள 78 ஏக்கர் தரிசு நில வயல் காடுகள் அழிக்கப்பட்டு அவை வயல் நிலங்களாக மாற்றப்படவுள்ளன.

இதன்மூலம் 30 விவசாய குடும்பங்கள் பயனடையவுள்ளன.

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட புலுமச்சி நாத குளத்தின் கீழ் 26 ஏக்கரும் தச்சடம்பன் குளத்தின் கீழ் 66 ஏக்கரும் அம்பகாமம் குளத்தின் கீழ் 126 ஏக்கருமாக மொத்த 129 ஏக்கர் தரிசுநிலக்காடுகள் அழிக்கப்பட்டு வயல் நிலங்களாக்கப் படுவதன் மூலம் புலுமச்சி நாத குளத்தின் கீழ் 32 குடும்பங்களும் தச்சடம்பன் குளத்தின் கீழ் 40 குடும்பங்களும் அம்பகாமம் குளத்தின் கீழ் 66 குடும்பங்களுமாக மொத்தம் 148 குடும்பங்கள் பயனடையவுள்ளன.

பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின்கீழ் 126 ஏக்கர் தரிசு நிலக்காடுகள் அழிக்கப்படுவதன் மூலம் 50 விவசாயக்குடும்பங்கள்நன்மைஅடையஉள்ளதாகவும்அவர்கள்மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

நூல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

ம.கனிந்தினி எழுதிய மழலைகளுக்கான ஊக்கி எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிறபகல் 3.30 மணிக்கு யாழ் புனிதர்சாள்ஸ்மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் வெ. யூட் சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.குகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் ந.மகேந்திரராசா, வலைப்பாடு புனித மரியாள் பங்குத் தந்தை வண.பிதா அன்ரனி வின் சன் சில்வெஸ்ரர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நூலின் முதற்பிரதியை யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் ந.மகேந்திரராசாவும், வலைப்பாடு புனித மரியாள் பங்குத் தந்தை வண.பிதா அன்ரனி வின்சன சில்வெஸ்ரர் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள். மதிப்பீட்டுரையை யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி பிரிவு உதவிக் கல்விப் பணிபபாளர திருமதி மைதிலி தேவராஜா நிகழ்த்த ஏற்புரையை நூலாசிரியர்செல்வி ம.கனிந்தினி ஆற்றுவார். (2-254)

வவுனியா விவசாயிகளுக்கு விவசாய செய்கை தொடர்பாக விளக்கமளிப்பு

(குருமன்காடு)

வவுனியா விவசாயிகளுக்கு புதிய முறையிலான விவசாய செய்கை தொடர்பான அறிமுக நிகழ்வு அணைமையில் வவுனியா முருகனூர் விவசாய பண்ணையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இளைய வளர்ப்பு மூலமாக வாழை, வெங்காயம், காளான் போன்ற பயிர்கள் செய்கை மேற்கொள்வதற்கு நிதியுதவி மற்றும் விவசாய உபகரணங்கள், விதைகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கை தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில்வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வன்னிபாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் வவுனியா மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அ. சகீலாபானு உட்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். (2-250)

டிப்பர் வாகனம் மோதி வயோதிபர் படுகாயம்

(கனகபுரம்)

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபரை பின்னால் பயணித்த டிப்பர் வாகனம் அடித்ததில் அவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் ஏ-9 வீதியிலுள்ள 246 ஆவது கிலோ மீற்றர் பகுதியில் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையான பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. இதில் 48 வயதுடைய நபரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி தனது தேவையின் நிமித்தம் பிரஸ்தாப நபர் பயணித்த வேளை அவரைப் பின் தொடர்ந்து வந்த டிப்பர் வாகனம் அடித்ததில் அவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் வாகனத்தை கைப்பற்றியதுடன் சாரதியையும் கைது செய்தனர். இது தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (2-15-259)

நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் தடுப்பூசி ஏற்றல்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் ஏற்படாமல் தடுப்பதற்காக தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை சுகாதாரதிணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் வவுனியாவின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இச் செயற்பாட்டில், முதற்கட்டமாக வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்ஒருகட்டமாக நேற்று முன்தினம் வவுனியா வடக்கிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டன.

இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, வீதியோர நாய்களுக்கும் இத் தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

மின்சாரம் வழங்கப்படாமையினால் வாழ்வாதார தேவைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது

கிராஞ்சி, வேரவில் மக்கள் மகஜரில் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராஞ்சி, வேரவில் ஆகிய கிராமங்களில் இடப் பெயர்வின் பின் 718 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு பல வருடங்கள் கடந்தும் தமக்கான மின்சாரம் வழங்கப்படவில்லையென்றும் இதனால்பாடசாலைமாணவர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்கள் உட்பட பல தரப்பட்ட மக்களும் மின்சாரமின்றி தமது தேவைகளை நிறைவேற்றமுடியாது பாதிக்கப்பட்டுள்ளதாகவடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் வடமாகாண ஆளுநர்மேஜர்ஜெனரல்ஜி.ஏ. சந்திரசிறிக்கும் தமது கோரிக்கைஅடங்கியமகஜர்ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பங்களை கொண்ட கிராமங்களாக கிராஞ்சியில் 501 குடும்பங்களும் வேரவில் கிராமத்தில் 217 குடும்பங்களுமாக மொத்தம் 718 குடும்பங்கள்வசிக்கின்றன.

இவர்களது பிரதான தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் காணப்படுகிறது. இம்மக்கள் மீள்குடியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கடந்தும் மின்சாரம்வழங்கப்படவில்லை.

இதனால் கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையில் 190 மாணவர்களும் கிளி/வேரவில் மகாவித்தியாலயத்தில் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் கல்வி பயின்றுவரும் நிலையில் இம்மாணவர்களது தகவல் தொழில்நுட்ப பாடம் உட்பட ஏனைய இணையத்தள மூலமான கல்விநடவடிக்கைக்கு கணனியை பயன்படுத்துவதற்கு மின்சாரம் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் தையல் வேலை சிறு உற்பத்தி பொருட்கள் தயாரிக்கும் வேலைஆகியசுயதொழில் முயற்சிகளுக்குமின்சாரம் வழங்கப்படாமையினால் எது வித முன்னேற்றம் இல்லாது வாழ்வில் பின்ன டைவை காண்பதாக தெரிவிக்கின்றனர்.

இதேபோல் ஏனைய பல தரப்பட்ட மக்களும் மின்சார வசதியின்றி காணப்படுகின்ற நிலையில் தமக்கு அருகிலுள்ள பல்லவராயன் கட்டுச் சந்தியிலுள்ள மின்பிறப்பாக்கியிலிருந்து 13 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள வலைப்பாடு எனும் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படுள்ளது.

பல்லவராயன் கட்டிற்கும் கிராஞ்சிக்கும் வேரவில் கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரம் முறையே 7 தொடக்கம் 10 கிலோ மீற்றராகும்.

இவ்வாறு தங்களைக் கடந்து அரை மைல் தூரத்தில் உள்ள வலைப்பாடு கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏன் தமக்கு வழங்கவில்லையென பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே வடக்கின் வசந்தம் ஊடாக தங்கள் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்துதவுமாறு தமகஜரில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தால் தமது அங்கத்தவர்களில் வீடற்றவர்களுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கையளிப்பு நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற போது... (படம்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடரும் அட்டூழியம்

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் அமெரிக்காவைச் சேர்ந்த மற்றுமொரு பத்திரிகையாளரும் கழுத்து அரிந்து கொலை

அமெரிக்க பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலே தலை துண்டிக்கப்பட்ட சம்பவத்தின் அதிர்ச்சி விலகுவதற்குள் அமெரிக்காவுக்கு மேலும அதிர்ச்சி அளிக்கும் வகையில் அந்நாட்டைச் சேர்ந்த இன்னொரு பத்திரிகையாளர் ஸ்டீவன் சாட் லாஃப் என்பவரின் தலையை துண்டித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சிப் படை.

31 வயதான ஸ்டீவன் சாட்லாஃப் கடந்த 2012ஆம் ஆண்டு சிரியாவின் ஆலெப்போ நகரில் இருந்து கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டார்.

இந்நிலையில், ஸ்டீவன் சாட்லாஃப் தலை துண்டிப்பு வீடியோ பதிவுகளை ஐ.எஸ். வெளியிட்டுள்ள நிலையில், அதன் நம்பகத்தன்மை குறித்து ஆராய்ந்து வருவதாக அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு 2ஆவது தகவல்

ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சிப்படை அனுப்பியுள்ள அந்த வீடியோவுக்கு (அமெரிக்காவுக்கு இரண்டாவது தகவல்) "A second message to America" என பெயரிடப்பட்டுள்ளது.

ஈராக் பிரச்சினையில் அமெரிக்க தலையீட்டை கண்டிக்கும் வகையில் ஸ்டீவன் சாட்லாஃப் தலை துண்டிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. இவரது தலை, ஈராக் பிரச்சினையில் அமெரிக்க தலையீட்டிற்கான விலை என்கிறது கிளர்ச்சியாளரின் அந்தப் பேச்சு.

இதேவேளை தங்கள் பிடியில் இருக்கும் டேவிட் ஹெய்ன்ஸ் என்ற பிரிட்டனைச் சேர்ந்த பிணைக் கைதியை கொலை செய்யப் போவதாக கிளர்ச்சியாளர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

அமெரிக்கா வருத்தம்

வெள்ளை மாளிகையில் அன்றாட செய்திகள் குறித்த கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இந்தச் செய்தி வெளியானது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தி செயலர் ஜோஷ் எர்னஸ்ட் கூறியதாவது,

ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தலை அமெரிக்க நிர்வாகம் கடந்த சில நாட்களாகவே கூர்ந்து கவனித்து வருகிறது. ஸ்டீவன் சாட்லாஃப் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது சில வாரங்களுக்கு முன்னரே உறுதியானது.

இந்தச் சூழலில் அவரது குடும்பத்திற்கும் அவருடன் பணியாற்றியவர்களுக்கும் அரசு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித் துக் கொள்கிறது. உடனடியாக வீடியோவின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய முடியாது. இது குறித்து புலனாய்வுத் துறை ஆராய்ந்து வருகிறது என்றார்.

அதே பாலைவனம்; அதே ஒரேஞ்சு உடை

கடந்த மாதம் அமெரிக்க பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலே கொல்லப்பட்ட வீடியோ பதிவு வெளியான போது அவர் ஒரு பாலைவனத்தில் இருந்ததும், ஒரேஞ்சு நிற அங்கி அணிந்திருந்ததும் தெளிவாக தெரிந்தது.

தற்போது, வெளியாகியுள்ள ஸ்டீவனின் வீடியோவும் அதே பாலைவன பின்னணியில் எடுக்கப்

பட்டுள்ளது. மேலும், ஸ்டீவனும் ஒரேஞ்சு நிற உடையே அணிந்திருந்தார். இதனால், போலேவும், சாட்லாஃபும் ஒரே நாளில் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், அமெரிக்காவுக்கு ஒரு சின்ன இடைவெளிவிட்டு அதிர்ச்சி அளிக்க வேண்டும் என்பதற்காக வீடியோவை காலதாமதமாக வெளியிட்டிருக்கலாம் என பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக வால் ஸ்ட்ரீட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

பான் கீ மூன் கண்டனம்

ஸ்டீவன் சாட்லாஃப் ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சிப் படையினரால் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களின் வெறிச் செயல் ஏற்புடையது அல்ல. மதத் தலைவர்கள் ஒருங்கிணைந்து இத்தகைய வெறிச் செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (இ)

பின்னால் தொங்கும் தலையுடன் முன்னேறிச் செல்லும் மனிதன்

பிரேசில் நாட்டில் மாற்றுத்திறனாளி ஒருவர் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பேசுவது மிகவும் ஆச்சரியத்தை எற்படுத்தியுள்ளது.

பிரேசிலின் மோண்டோ சண்டோ (Mondo Sando) நகரை சேர்ந்த க்ளாடியோ (Clodiyo வயது- 37) என்ற நபர் தலை பின்னால் மடங்கியும், கால்கள் மற்றும் கைகள் ஊனமுற்றும் பிறந்துள்ளார்.

மருத்துவர்கள் இவர் உயிர் பிழைக்க மாட்டார் என்று எண்ணிய நிலையில் இவர் கணக்காளர் பட்டபடிப்பு முடித்துவிட்டு மற்றவர்களை ஊக்குவிக்கும் பேச்சாளராக செயற்படுகிறார்.

இதுகுறித்து சாண்டோ கூறுகையில்,

நான் சிறு வயதிலிருந்து எனது வேலைகளை நானே செய்ய வேண்டும் என்று நினைத்தேன் என்றும் மேலும் தொலைக்காட்சி, கையட க்கத்தொலைபேசி மற்றும் இணை யதளம் என அனைத்தையும் உபயோகிக்க கற்று கொண்ட தாகவும் தெரிவித்துள்ளார்.

இவர், வாயில் தட்டச்சு செய்யவும், கணனி மற்றும் கைப்பேசியை தனது உதடுகளில் உபயோகித்து வருகிறார். (இ)

சீனாவில் மீண்டும் நிலச்சரிவு 8 பேர் பலி

தென்மேற்கு சீனாவில் உள்ள சோங்கிங் நகரில் கடந்த சில தினங்களாக புயலுடன் பலத்த மழை பெய்து வந்தது. இதன் காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி 8 பேர் உயிரிழந்தனர். 11 சுரங்க தொழிலாளர்கள் உட்பட 24 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணியில் 500இற்கும் மேற்பட்ட மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். யுன்யாங் கவுண்டியில் 9 நகரங்கள் மழை வெள்ளத்தால் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளன. அங்கிருந்து 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை மீட்பு படையினர், பொலிஸார், தீயணைப்பு படையினர் மீட்டு, பாதுகாப்பு முகாம்களில் தங்க வைத்தனர்.

இதேபோல் யுங்யாங் வுகி பெஜ் மற்றும் வுஷான் ஆகிய பகுதிகளில் பெய்த மழையால் போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. உக்ஸி பகுதியில் உள்ள 32 நகரியங்களில் இரண்டரை இலட்சம் பேர் மழையால் பாதிக்கப் பட்டுள்ளனர். (இ)

பறவை போன்று பறக்கும் ரோபோ



பலவித வடிவங்களில் ரோபோக்கள் (எந்திர மனிதன்) வடிவமைக்கப்பட்டு செயற்பாட்டில் உள்ளன. தற்போது பறவை போன்று பறக்கும் ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. இதை நெதர்லாந்தை சேர்ந்த நிகோ நிஜன்குயிஸ் தாமாகவே முயன்று கண்டுபிடித்துள்ளார். இதற்கு ரோபோர்டு என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ரோபோ பறவை உண்மையான பறவை போன்று சிறகடித்து பறந்து ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. பிரச்சினைக்குரிய பகுதிகளில் இந்த ரோபோ பறவையை பறக்கவிட்டு சிக்கல்களை தீர்க்க முடியும் என அதை கண்டுபிடித்த நிகோ நிஜன் குயிஸ் தெரிவித்துள்ளார். (இ)

இராணுவ நடவடிக்கை தீர்வல்ல ஐ.நா.செயலர் கருத்து

உக்ரைன் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது என மேற்கத்தேய நாடுகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

பெரும் போரை ரஷ்யா தொடங்கியுள்ளதாக உக்ரைன் அரசு குற்றம்சாட்டியுள்ளது. இதனிடையே, உக்ரைன் அருகேயுள்ள நேட்டோ படைகள் ஆயத்த நிலையில் உள்ளன. இந்நிலையில் பான் கீ மூன், அபாயகரமான சூழலைத் தவிர்க்கும்படி மேற்கத்தேய நாடுகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நியூ ஸிலாந்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ஐரோப்பிய ஒன்றியம், அமெரி மற்றும் ரஷ்ய பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

இதனிடையே, உக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சர் தனது பேஸ்புக் பக்கத்தில், ரஷ்யாவுக்கு எதிராகப் படைகளைக் குவிக்க வேண்டும்.

கிளர்ச்சியாளர்கள் வசமிருக்கும் பகுதி மட்டுமின்றி, உக்ரைனின ஏனைய பகுதிகளையும் கைப்பற்ற ரஷ்யா முயல்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு ஐரோப்பா பார்த்திராத மிகப் பெரும் போர் ஒன்று நம் வாசலில் காத்திருக்கிறது.

பல்லாயிரக் கணக்கானோர் பலியாகக் கூடும் என அவர் எச்சரிக்கை செய்திருந்தார். இதைத் தொடர்ந்தே, இராணுவ நடவடிககை தீர்வாக அமையாது என பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (இ)

மோதலில் 31 பேர் பலி!

லிபியாவின் கிழக்கு நகரான பெங்காஸியில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் பதவியை துறந்த இராணுவ தளபதிக்கு ஆதரவான போட்டி குழுவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு தரப்பிலும் 31 பேர் உயிரிழந்தனர்.

பெங்காஸி நகரின் பெனினியா விமான நிலையத்தை சுற்றிலும் நடைபெற்ற இம் மோதல் பல மணி நேரம் நீடித்தது. இதில் ஹிப்டர் தரப்பில் 20 பேரும் தீவிரவாதிகள் தரப்பில் 11 பேரும் உயிரிழந்தனர். மேலும் இரு தரப்பிலும் 31 பேர் காயமடைந்தனர். இத்தகவலை பெயர் கூறவிரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடலில் தத்தளித்த மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு கடற்பரப்பில் படகு மூழ்கிய நிலையில் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த போது காங்கேசன்துறை கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட 6 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கம றியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் செல்வநாயகம் லெனின்குமார், நேற்று உத்தரவிட்டார்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மேற்படி 6 மீனவர்களும், அவர்களின் படகு மூழ்கிய நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கடலில் தத்த ளித்துக் கொண்டிருந்தனர்.

இவர்களை காப்பாற்றிய காங்கேசன் துறை கடற்படையினர், ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து, ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்படி மீனவர்களை ஊர்காவற்றுறை நீதி மனறத்தில் நேற்று ஆஜர்படுத்திய போதே அவ ர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான்உத்தரவிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் நெடுந் தீவு கடற் பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 9 தமிழக மீவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமயறியலில் வைக்க ஊர்காவற்றுரை நீதிமன்றம் உத்தரவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

நன்றி–மிரர்



இராணுவக் காணி சுவீகரிப்பு; பிரிட்டன் தூதுவருக்கு மகஜர்

அம் மகஜரில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

9 ஆயிரத்து 968 குடும்பங்க ளைச் சேர்ந்த 34 ஆயிரத்து 368 பேருக்கு சொந்தமான 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவம் கடந்த 25 வருடங்களிற்கு மேலாக பிடித்து வைத்துள்ளது.

மக்களை மீள்குடியேற்ற விடாது இராணுவம் பிடித்து வைத்துள்ள காணியில் இராணுவத்தினர் உல் லாச விடுதிகள், ஸ்தாபனங்கள் என பவற்றினை அமைத்து பயன்படு த்தி வருகின்றனர்.

அப்பகுதியைச் சேர்ந்த மீனவர் கள் உட்பட அனைவரும் தொழில் செய்யமுடியாத நிலையில் தமது வாழ் வாதாரத்தை இழந்து வருகின்றனர்.

ஆகையினால் பிரித்தானியா இது தொடர்பில் கவனமெடுத்து அம்மக் களை உரிய இடத்தில் மீள்குடியே ற்ற வேண்டுமென கையளித்த மக ஜரில் மேலும் தெரிவித்தார். (இ

யாழ்.வலி.வடக்கில் இராணுவத் தினரால் மேற்கொள்ளப்படும் நடவ டிக்கைகள் பற்றியும் அங்கு மக் களை மீள்குடியேற்ற நடவடிக்கை யெடுக்க கோரியும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீனிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரினை வலி.வடக்கு மக்களின் சார்பில் வலி.வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் உறுப்பின ரும் வலி.வடக்கு பிரதேச சபையின் உபதலைவருமான எஸ்.சஜீவன் கையளித்துள்ளார்.

சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொண்டைமானாறு செல வச்சந்நிதி பெருந் திருவிழாவை யொட்டி சந்நிதியான் ஆச்சிர மக் கலை, புண்பாட்டுப் பேரவை யின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு ஆசிரியர்க.கைலை நாதன் வழங்கும் முருகனும் அழகும் எனும் தலைப்பிலான சொற்பொழி இடம் பெறவுள்ளது. (இ)

யாழ்.மருத்துவ சங்க புதிய நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மருத்துவ சங்க த்தின் புதிய தலைவராக வைத் திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மருத்துவசங்க புதிய நிர் வாகம் தெரிவு செய்யப் பட்டுள்ளது தொடர்பாக யாழ். போதனா வைத் தியசாலையின் பதில்ப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீ பவான ந்தராஜா மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவ சங்கத்தின் வரு டாந்தப் பொதுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றபோது 2014-2015 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட துடன் அதன் தலைவராக வைத் தியகலாநிதி முரளி வல்லிபுர நாதன் தெரிவு செய்யப்பட்டுள் ளார்.

சிரேஷ்ட உப தலைவராக வைத் திய கலாநிதி ரி.பேரானந்தரா ஜாவும் கனிஷ்ட உப தலைவராக வைத்திய கலாநிதி நளாயினியும் வரும் ஆண்டிற்காக முன்மொழிய ப்பட்ட தலைவராக வைத்திய கலா நிதி சந்திரகுமாரும் தெரிவுசெய்ய ப்பட்டனர்.

பொருளாளராக வைத்திய கலா நிதி சிவபாதமூர்த்தியும் செயலாள ராக வைத்திய கலாநிதி சுரேந் திரகுமாரனும் பத்திராதிபராக வைத்திய கலாநிதி அஜந்தாவும் நூலகராக வைத்திய கலாநிதி எஸ் நிமலனும் உதவி நூலகராக வைத திய கலாநிதி பிரியதர்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக உறுப்பினர்க ளாக வைத்திய கலாநிதி சத்தி யதாஸ், வைத்திய கலாநிதி ஸ்ரீத ரன், வைத்தியகலாநிதி ஸ்ரீபவா னந்தராஜா, வைத்திய கலாநிதி அம்பலவாணர், வைத்திய கலா நிதி கோபிசங்கர், வைத்திய கலா நிதி மலரவன் ஆகியோர் தெரி வாகினர். (இ-4)

யாழ்.அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமார சுவாமிக்குருக்கள் நினைவாக இந்துக் குருமார் அமைப்பினால் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனுக்கு சைவநெறி வித்தகர் என்ற கௌரவப்பட்டம் வழங்கி அண் மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதன்போது இணுவில் தர்மதான்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகா தேவக் குருக்களும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமி களும் இணைந்து விருதினைக் கையளிப்பதை படத்தில் காணலாம்.

பொலிஸ் திணைக்களத்தின் 148 ஆவது ஆண்டு நிறைவு



(யாழ்ப்பாணம்)

கடந்த 1866 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் திணைக்களத்தின் 148 ஆவது ஆண்டு நிறைவு தினம் யாழ்.பொலிஸ் தலைமையகத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தலைமையில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ் கலந்து கொண்டு பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டனர்.

கடந்த 1866 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 84 ஆயிரத்து 100 பொலிஸார் கடமையின் போது உயிரிழந்துள்ளனர்.

30 வருடகாலமாக பயங்கரவாதத்தினை வெற்றி கொள்ள கடமை யாற்றிய பொலிஸார் தற்போது மக்களுடன் இணைந்து மக்கள் பணி களினை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளனர் என அணிவகுப்பு மரியாதையின் போது தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்களின் ஒத்துழைப்பின்மையால் பிசுபிசுத்துப்போன பணிப்புறக்கணிப்பு

தபால் சேவை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு யாழ்.அஞ்சல் திணைக்கள ஊழியர் கள் ஒத்துழைப்பு வழங்காமையி னால் யாழ்ப்பாணத்தில் வேலை நிறுத்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தபால் திணைக்களத்தில் நில வும் பிரச்சினைகள் மற்றும் குறை பாடுகளுக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி தபால் சேவை ஊழிய ர்கள் நேற்று புதன்கிழமை வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள் ளதாக அறிவித்தனர்.

இதன்படி நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிமுதல் நேற்று நள்ளிரவு 12 மணிவரை ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டம் நடை பெறுமெனவும் இதனால் நாடெங் கிலுமுள்ள தபால் நிலையங்க டையுமென இலங்கை தபால்சேவை ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜய ந்த விஜேசிங்க தெரிவித்திருந்தார்.

தபால்திணைக்களத்தின் சேவை க்கு புதியவர்களை இணைத்துக்கொள் ளும் போது இடம் பெறும் மோசடி கள், அரசியல தலையீடுகள் ஆகியவ ற்றை தடுத்து நிறுத்தல் வேண்டும்.

ஊழியர்களின் பதவியுயர்வுகள் தொடர்பாக கவனம் செலுத்துமா றும் தேவையில்லாத செலவுகளை குறைத்துக் கொள்ளுமாறும் வலியு றுத்தி இவ் வேலை நிறுத்தப் போரா ட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் இதில் தபால் திணைக்களத்தின் 19 தொழி ற்சங்கங்கள் ஈடுபடவுள்ளன எனவும தபால சேவை ஊழியர் சங்கத்தின் தலைவர் ஜயந்த விஜேசிங்க தெரி வித்திருந்தார்.

இவ் வேலை நிறுத்தப் போரா ட்டத்தினால் தபால் நிலையங் களின் கடித போக்குவரத்து விநி யோகம் உட்பட சகல செயற்பாடு களும ஸ்தம்பிதமடையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. யாழ். மாவ ட்டம் உட்பட பெரும் பாலான இடங்க ளில் குறித்த வேலை நிறுத்தப் போரா ட்டம் முன்னெடுக்கப்படவில்லை.

ஊழியர்களின் ஒத்துழைப்பி ன்மை காரணமாக குறித்தவேலை நிறுத்தப் போராட்டத்தில் நாம் ஈடுப ட வில்லை என யாழ் அஞ்சல் திணைக் களத்தின் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனால் நாடளாவிய ரீதியிலான போராட்டம் என்பது பயனளிக்கவி ல்லை என கூறப்படுகின்றதோடு இவ வாறான ஒத்துழைப்பில்லா போராட் டங்களினால் எமக்கான தீர்வினை பெற்றுவிட முடியாது எனவும் ஊழி யர்கள் தெரிவித்தனர். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆட்டுக் கூட்டத்திற்கு சிங்கம் தலைமை வகிக்கலாம். ஆனால் சிங்கக் கூட்டத்திற்கு ஆடு தலைமை வகிக்கக் கூடாது. — டானியல் டிஃபோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

அடாவடித்தனமான மாணவர்களுக்கு அதிபர் பயங்கரவாதியாக இருக்க வேண்டும்

எங்கள் பண்பாடு, கலாசாரம், ஒழுக்கம் என்பன பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அவை இளைய சந்ததியிடம் கையளிக்கப்பட வேண்டும். அந்தக் கையளிப்பில் பிசகுநிலை ஏற்பட்டால் அதன் முடிவு இனத்தின் வீழ்ச்சியாக இருக்கும்.

எனவே சம காலச் சவால்களுக்கு முகம் கொடுத்து தமிழினம் தனது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி எங்கள் மாணவ சமூகத்தை வழிப்படுத்துவதாகும்.

எனினும் எங்கள் பாடசாலைக் கட்டமைப்பில் மாணவர்களை வழிப்படுத்தல் என்பது மிகப்பெரிய பலவீனத்தில் இருப்பதைக் காணமுடியும். மாணவர்களைக் கட்டுப்படுத்துவதில் பலவீனமாக இருக்கக் கூடிய பாடசாலைக் கட்டமைப்பால் எதுவும் செய்து விட முடியாது என்பது சர்வ நிச்சயம்.

பாடசாலையில் ஏற்படுகின்ற மாணவர் பிறழ்வு பரிணாம வளர்ச்சியுடன் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்விப் பீடங்களை நோக்கி நகர்த்தப்படுகின்றன. அங்கு மாணவ நிலைக் குழப்பங்கள் உச்சமடைய எங்கள் இனத்துவப் பண்பாடுகளும் அடையாளங்களும் அறுபட வாய்ப்பாகின்றது.

எனவேதான் மாணவர்களுக்கான ஒழுக்க நெறிக் கோவை தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அவை மிக இறுக்கமாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம். இது குறித்து கருத்து தெரிவித்தவர்களில் பலர், மாணவர்களைத் தண்டிப்பது நியாயமற்றது எனக் கூறியிருந்தனர்.

மாணவர்களை உடல், உள ரீதியாகப் பாதிக்க வைப்பது மகாகுற்றம் என்பதில் எம்மிடம் மாற்றுக் கருத்தில்லை.

அதேநேரம் ஒரு மாணவனின் அடாவடித்தனத்தால் பல மாணவர்கள் நெறி பிறழ்வடையக் கூடிய சந்தர்ப்பம் உண்டெனில் குற்றம் இழைக்கும் மாணவனைப் பாதுகாக்க முற்படுவது எங்கள் மக்கள் சமூகத்திற்கு நாம் செய்யும் மிகப் பெரும் அநீதியாகும்.

எனவே, குற்றம் செய்கின்ற–பாடசாலையின் ஒழுங்கு கட்டுப்பாடுகளை மீறுகின்ற மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இல்லையேல் நல்ல மாணவர்களையும் பழுதாக்குகின்ற பணியை மட்டுமே பாடசாலைகள் செய்வதாக இருக்கும்.

யாழ்.மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். அவருக்கு இந்துக் கல்லூரிச் சமூகம் வரவேற்புவசாரம் நடத்தியது. இந்த நிகழ்வில் இந்துக் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வு நடந்து கொண்டிருந்தபோது ஒரு உயர்தர வகுப்பு மாணவன் ஆ... ஹா... ஹீ... ஹீ... என்று பலமாகக் குரல் கொடுத்தான். நடந்தது அவ்வளவுதான். மேடையில் இருந்து இறங்கிய அதிபர் சபாலிங்கம் அந்த மாணவனைத் தேடிச்சென்று பளார் என்று ஓர் அறை கொடுத்தார்.

அதிபர் சபாலிங்கம் கொடுத்த அந்த அடி அவர் ஓய்வு பெறும் வரைக்கும் அதன் பின்னரும் யாழ். இந்துக் கல்லூரிக் கூட்டங்களில் மாணவர்கள் நிசப்தமாக இருப்பதற்கு பேருதவி புரிந்தது.

அதிபர் பதவியை உத்தியோக பூர்வமாக ஏற்பதற்கு முன்னதாக– வரவேற்பு விழாவில் அதிபர் சபாலிங்கம் ஒரு மாணவனுக்கு கொடுத்த அடி அவருக்கு **பயங்கரவாதி** என்ற பட்டத்தைச் சூட்டியது.

உலக நாடுகளில் இன்று பரவலாகப் பேசப்படுகின்ற **பயங்கரவாதி** என்ற பெயரை முதல் முதலில் பெற்றுக் கொண்டவர் ஒரு அதிபர் என்பதும் அந்தப் பட்டத்தை மாணவர்களே வழங்கி இருந்தனர் என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

இந்தச் சம்பவம் எதைக் குறிக்கிறது எனில், சில இடங்களில் அதிபர் ஆசிரியர்கள் அடங்காத சில மாணவர்களுக்கு பயங்கரவாதிகளாக இருக்க வேண்டும் என்பதாகும்.

ஜனாதிபதி மகிந்தவின் வேட்புமனுவை தேர்தல் ஆணையர் நிராகரிக்க முடியும்

ஜ.தே.க. எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வேட்பு மனுவை தேர்தல் ஆணையாளரினால் நிராகரிக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த இரண்டாம் முறையாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னரே 18ஆம் திருத்தச் சட்டம் அமுல் படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வேட்பு மனுவை நிராகரிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு காணப்படுவதாகத் தெரிவித்தார். சட்டத்தில் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் பதவி வகிக்கும் ஜனாதிபதிகளுக்கே புதிய சட்டத்தின் பிரகாரம் இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியும் எனவும், தற்போதைய ஜனாதிபதிக்கு அவ்வாறு பதவி வகிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் முறையாக தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தால், சட்டமா அதிபரிடம் ஆலோசனைப் பெற்றுக் கொண்டு வேட்பு மனுவை நிராகரிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 1833ஆம் ஆண்டு முதல் சுயாதீனமான அலகாக இயங்கி வந்த சட்டமா அதிபர் திணைக்களத்தை, ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், ஜனாதிபதியின் கீழ் இயங்கும் ஓர் அலகாக மாற்றியமைத்தது என அவர்குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் கீழ் இயங்கி வரும் சட்டமா அதிபர், தனது எஜமானருக்கு எதிராக செயற்படுவார் என எதிர்பார்க்க முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய தாம் பாராளுமன்றில் சமர்ப்பித்த வழக்குகள் கிடப்பில் போடப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

மன்னாரில் ஆணின் சடலம்

(மன்னார்)

மன்னார், வங்காலை கடற்கரையில் நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கி இருப்பதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கரையொதுங்கிய சடலம் சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஆணுடையது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வங்காலை பிரதேசத்தை சேர்ந்த மீனவர்கள் வழங்கிய தகவலை அடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சில தினங்களாக கடலுக்குள் இருந்ததால் சடலம் பழுதடைந்துள்ளது.

சம்பவம் குறித்து மன்னார் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சடலம் தொடர்பாக நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-11)

ஜேர்மன் தூதுவர் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜர்கன் மொர்காட் ஒரு நாள் உத்தியோகபூர்வமாக இன்று வியாழக்கிழமை யாழிற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். வரும் ஜேர்மன் தூதுவர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட உயர் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கின் அபிவிருத்தி குறித்தும், இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் அவர் ஆராயவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

இலங்கை அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தத்துக்கு அமைவாக சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பங்காளிகளாக இணைந்து செயற்பட்டு புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுத்து உருப்படியாக ஒரு தீர்வை எட்ட வேண்டும் என்னும் தான் 13ஆவது திருத்தத்துக்கு உட்பட்டே செயற்படுவதாகவும் பாரதப்பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இவ்வறிவுரை சம்பந்தமாக கலந்துரையாடி ஒரு பொதுநிலைப்பாட்டை எடுப்பது சம்பந்தமாக இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் இம் மாதம் 15ஆம் திகதி நடைபெறும் என்பதைதமிழர்விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (இ)

யுவதி கொலையுடன் தொடர்புடைய வைத்தியருக்குத் தூக்குத்தண்டனை

(கொழும்பு)

ஆடை தொழிற்சாலை யுவதியான சமிளா திசாநாயக்கவின் மரணம் தொடர்பான கொலை வழக்கின் சந்தேக நபரான வைத்தியர் இந்திக சுதர்சனபாலகே ஜயதிஸ்ஸ என்பவரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து நேற்று புதன்கிழமை தீர்ப்பளித்தது.

நீர்கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எம்.எம்.ஏ.கபூர் அவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

2007ஆம் ஆண்டு சிகிச்சைக்காக வந்த யுவதியை சந்தேகநபரான வைத்தியர் மயக்க மருந்து கொடுத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் வைத்தியசாலையின் ஆறாவது மாடியிலிருந்து கீழே தள்ளி கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே வைத்தியர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான வழக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் வைத்தியருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ

சத்திய தரிசனம்

மகிழ்ச்சிக்கான வழி

- செல்வத்தால் கிடைக்கும் மகிழ்ச்சி நிலையானதல்ல. சுயநலமற்ற சேவையே மனதிற்கு நிலையான மகிழ்ச்சி தரும்.
- ஆடம்பரத்தை அரக்க குணம் என்றே சொல்ல வேண்டும். தலைவனாக வாழ விரும்புவன் எளியவனாக வாழப் பழக வேண்டும்.
- பிறர் புகழ்வதையும், இகழ்வதையும் பொருட்படுத்த வேண்டாம். மனதிற்குச் சரியெனப் பட்டதைச் செய்யுங்கள்.
- கடந்த காலத்தை மீண்டும் பெற முடியாது. வருங்காலம் நம் கையில் இல்லாதது. அதனால், நிகழ்காலத்தை பயனுடையதாக்குங்கள்.
- வாழ்க்கையை சத்திய சோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம், சொல், செயல் மூன்றிலும் சத்தியத்தைக் கடைப்பிடியுங்கள்.

அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

உங்கள் உடல்நலக் குறிப்புக்கள்

- உடலில் அதிக உஷ்ணம் ஏற்பட்டுத் துன்பம் கொடுக்கும் பொழுது அடிக்கடி உணவில் வெந்தயம் சேர்த்துக்கொள்ளுங்கள்.
- காலைவேளையில் வெறும் வயிற்றில் வெந்தயப் பொடி சாப்பிட்டுத் தண்ணீர் குடிக்கவும்.
- உண்ணும் பொழுது சாதத்தில் சிறிது மிளகுத்தூள், உப்புச்சேர்த்து நெய்போட்டுப்பிசைந்து சூடாக்கிச் சாப்பிட்டால் அலர்ஜிகள் நீங்கிவிடும். மிளகு சிறந்த கிருமிநாசினி.
- அடிக்கடி கோபம் கொள்ளாதீர்கள். ஏனெனில் கோப உணர்ச்சி கல்லீரலைப் பாதிக்கின்றது. சந்தோசம் வந்தாலும் கூட ஓரளவே சந்தோசப்படவேண்டும். ஏனெனில் அதிக சந்தோசம் மனிதனின் இதயத்தைப் பாதிக்கின்றது.
- வாழை இலையில் சாப்பிடுவதால் முகம் பளபளக்கும். அழகும் கவர்ச்சியும் கூடும்.
- உடல் குண்டாகிவிட்டால் இருதய நோய்க்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம். எனவே அதிக உணவு உண்டு உடலைப் பருமனாக்கிக் கொள்ளக்கூடாது.
- உதடு கறுப்பாக இருந்தால் சிறிது சந்தனத்தை பன்னீரில் கலந்து தினமும் உதடுகளுக்குப் பூசினால் உதடு சிவப்பாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிக் குமரன் வி.கழக கிரிக்கெட் சுற்றுப் போட்டி

இணுவில் கலையொளி சம்பியன்

குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிகெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் பொற்பதி இந்துவை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகத்தினர்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கலைஒளி 10 பந்துப் பரிமாற்றங்களில் 76 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து 10 பந்துப் பரிமாற்றங்களில் 62 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் கலைஒளி அணி சார்பாக சுரேந்திரன் 36 ஓட்டங்களையும் பந்துவீச்சில் கார்த்திக் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சுரேந்திரனும் போட்டி தொடர் நாயகனாக மோகன்ராஜ்சும் தெரிவாகினர். (க-23)

சவால் விடும் போல்ட்

உலகின் அதிகவேக மனிதரான ஜமைக்காவின் உசேன் போல்ட், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் யுவராஜ் மற்றும் ஹர்பஜன் என்னுடன் மோத வேண்டும் என சவால் விடுத்துள்ளார்.

பெங்களூர் சின்னச்சாமி அரங்கத்தில் நடக்கும் காட்சி கிரிக்கெட் போட்டியில் போல்ட் பங்கேற்கிறார். இதில் யுவராஜ், ஹர்பஜன் சிங், ஜாகிர்கான் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

இதுகுறித்து பெங்களூரில் நடந்த தனியார் நிறுவன நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், இந்த ஓட்டப் போட்டியில் யுவராஜ் சிங்கும், ஹர்பஜன் சிங்கும் 14 அல்லது 14.5 வினாடிகளில் போட்டி தூரத்தைக் கடக்க வேண்டும்.

அதே சின்னச்சாமி அரங்கத்தில் இந்த சவாலையும் சந்திக்க நான் ரெடி. அவர்கள் ரெடியா? என்று சிரித்தபடி கேட்டுள்ளார் போல்ட்.

100 மீற்றர் ஓட்டத்தில் போல்ட் வைத்துள்ள சாதனை நேரமானது 9.58 விநாடி என்பது குறிப்பிடத் தக்கது. (க)

பாய் விரித்து படகோட்டும் போட்டி!



ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி விளையாட்டு கழகம், கடற்றொழிலாளர் சங்கங்கள், காந்திஜி சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில், பாய் விரித்துப் படகோட்டும் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அராலி துறையில் போட்டிகள் ஆரம்பமாகின. முறையே ஏ அணிகான போட்டியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார்.

பீ அணிக்கான போட்டியை கூட்டமைப்பின் முக்கியஸ்தரான ஹென்றி மகேந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் தம்பாட்டி கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் சிவநேசப்பிள்ளை, செயலாளர் அன்னராசா, விளையாட்டு குழு தலைவர் கனகையா உட்பட பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர். (க)

கூடைப்பந்து, கரப்பந்தாட்ட மைதானங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுங்கள்

அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை

யாழ்.மாவட்டத்தில் கூடைப்பந்து மற்றும் கரப்பந்தாட்ட மைதானங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் இடம்பெற்ற யாழ் மாவட்ட கூடைப்பந்து, கரப்பந்து சங்கங்களினது பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த இரண்டு விளையாட்டுகளுக்குமான மைதானத்தை பழைய பூங்கா வளாகத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன.

அந்தவகையில், குறித்த மைதானங்களை செப்பனிடும் வகையில் சிரமதானத்தை ஏற்பாடு செய்து துரிதப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்த அமைச்சர் அவர்கள், மேலும் பட்மின்ரன், வலைப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கான மைதானங்களை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இதன்பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் குறித்த விளையாட்டுத்துறைகளை வளர்த்தெடுக்கும் முகமாக விளையாட்டுக் குழுவொன்றை அமைத்து அதன்மூலம் திட்டங்களை முன்னெடுக்கவும் அமைச்சர் விசேட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு திட்டங்களை சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே விளையாட்டு மைதானங்களை உட்கட்டுமான பணிகளை முன்னெடுக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், மாவட்ட நில அளவையாளர் சிவதாஸ், யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர். (க-23)

தொடரும் தோல்விகளால் அதிருப்தியடைந்த குக்

சொந்த மண்ணில் தொடர் தோல்வியை சந்தித்து வரும் இங்கிலாந்து அணி தொடர்பில், அணித்தலைவர் அலஸ்டயர் குக் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான நேற்றைய போட்டியில் ஏற்பட்ட தோல்வி குறித்து குக் கருத்து வெளியிட்டார்.

இது ரொம்ப கடினமான நாள். எங்களது திறமைக்கு ஏற்ப ஆடாதது ஏமாற்றம் அளிக்கிறது. நாங்கள் முதலில் துடுப்பெடுத்தாடவே விரும்பினோம். ஆனால் துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு என எல்லாவற்றிலும் இந்தியா அணி எங்களை விட சிறப்பாக செயற்பட்டது.

தொடர்ந்து மூன்று போட்டிகளில் தோற்பது என்பது மோசமான ஒன்று தான். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற பிறகு,



இப்போது ஒரு நாள் போட்டியில் விளையாடும் விதம் வேதனை அளிக்கிறது.

தோல்விக்கு காரணம் என்ன என்பதே தெரியவில்லை. உலககோப்பை நெருங்கும் நேரத்தில் நாங்கள் வெற்றி வேட்கையை காண்பிக்க வேண்டும். எங்களிடம் திறமை இருக்கிறது. அதை மேம்படுத்த வேண்டியது அவசியம். இன்றைய நாள் மொயீன் அலிக்கு மட்டுமே நன்றாக இருந்தது என குக் மேலும் தெரிவித்துள்ளார். (க)

ஒருநாள் போட்டிகளில் அதிக வெற்றிகளுடன் டோனி

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அந்நாட்டு அணிக்கெதிராக ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணியின் கப்டன் பொறுப்பில் உள்ள டோனி அதிக ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்றவர் என்ற பெருமையை பெற்று சாதனை படைத்தார்.

இதற்கு முன் இந்த சாதனை முன்னாள் கப்டன் அசாருதீன் வசம் இருந்தது.

1990 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை கப்டன் பொறுப்பில் இருந்த அசாருதீன் 174 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 90 ஒரு நாள் போட்டிகளை வென்றிருந்தார். ஆனால் தற்போதைய கப்டன் டோனி 162 போட்டிகளில் கேப்டனாக பொறுப்பு வகித்து 91 ஆவது வெற்றியை ஈட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

யு.எஸ் ஓபனில் சானியா முன்னேற்றம்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா, மகளிர் இரட்டையர் பிரிவில் காலிறுதிக்கும், கலப்பு இரட்டையர் பிரிவில் அரையிறுதிக்கும் முன்னேறினார்.

மகளிர் இரட்டையர் 3 ஆம் சுற்று ஆட்டத்தில் சானியா மிர்சா-காரா பிளாக் ஜோடி, ஜான்கோவிக்-கிளாரா கோகலோவா ஜோடியை 6:3, 6:2 என்ற நேர்செட்களில் வென்று காலிறுதியை உறுதி செய்தது.

இதேபோல் கலப்பு இரட்டையர் பிரிவில் முதல் தரநிலை ஜோடியான சானியா-புருனோ சோர்ஸ் ஜோடி, 6 ஆம் தரநிலையில் இருக்கும் போபண்ணா-செர்பாட்னிக் ஜோடியை 7:5, 2:6, 10:5 என்ற செட்கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

அதேசமயம், இந்தியாவின் முன்னணி வீரரான லியாண்டர் பயஸ் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் தோல்வியைத் தழுவினார். இதன்மூலம் அமெரிக்க ஓபனில் அவரது போட்டி முடிவுக்கு வந்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜிவ் காந்தி கொலை...

துக்கு நடந்த கொலைதான். சுப். பி.ஜ சொல்வது போல தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு இதில் தொடர் பிருக்குமா என்பது சந்தேகமே என்கிறது என்று இப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து நூலாசிரியர் ஃபெராஸ் அஹ்மத், இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியுள்ளதாவது.

ராஜிவ் காந்தி கொலையின் பின்னணி பாதுகாப்பை விசாரித்த ஜெயின் கமிஷன், வர்மா கமிஷன் என்ன கூறியது என்பதை முதலில் பார்த்தேன். இந்தக் கொலை குறித்து சி.பி.ஜ இயக்குநர் கார்த்திகேயன், ராஜிவ் கொலை வழக்கின் தலைமை புலனாய்வு அதிகாரி ரகோத்தமன், சி.பி.ஜ அதிகாரி வினோத்குமார் ராஜு, அப்போது சட்ட அமைச்சராக இருந்த சுப்பிரமணியன் சுவாமி, முன்னாள் தமிழக டி.ஜி.பி மோகன்தாஸ், பத்திரிகையாளர் மனோஜ் மிட்டல் என்று பலர் இது பற்றி சொன்ன வற்றை தொகுத்தேன். இப்படி எழுதியவர்கள் எல்லாம் முக்கியப் பொறுப்புகளில் இருந்தவர்கள்.

1989ஆம் ஆண்டு தேர்தலில் வி.பி.சிங்கிடம் தோல்வியடைந்த ராஜிவ் காந்தியும் காங்கிரஸ் கட்சியும் ஒருபோதும் மீண்டும் ஆட்சிக்கு வரும் சூழ்நிலையில் இல்லை. ராஜிவ் கொலை செய்யப்பட்ட பின்னர்தான் அனுதாப அலை ஏற்பட்டது. அப்படியும் காங்கிரஸால் 240 இடங்களில்தான் வெற்றிபெற முடிந்தது.

மற்ற கட்சிகளின் ஆதரவுடன், நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தது. இதனால் அவர் கொலை செய்யப்படவில்லை என்றால் அவரால் ஆட்சிக்கு நிச்சயமாக வந்திருக்க முடியாது.

ராஜிவ் காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தன்னையும் தன்னுடைய விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அழித்துவிடுவார் என்று பிரபாகரன் பயந்தார். இதனால் தான் அவர் கொலை செய்யப்பட்டார் என்பதுதான், இந்தக் கொலை வழக்கை விசாரித்த சி.பி.ஜ முன்வைத்த காரணமாகும்.

ஆனால், இது எவ்வளவு மடத்தனமானது என்பதை அறியலாம். ராஜிவ் காந்தி ஆட்சிக்கு வரக்கூடிய சூழ்நிலையும் இல்லை. அப்படியே வந்தாலும் படைகளை இலங்கைக்கு அவரால் அனுப்பவும் முடியாது.

முன்பு அவர் அமைதிப்படையை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடனான உடன்பாட்டின் அடிப்படையில் அனுப்பினார். பின்னர் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பிரேமதாச தலைமையிலான ஆட்சி நடந்து கொண்டு இருந்தது. ராஜிவ் காந்தி பதவியில் இருந்தவரை படைகளை திரும்பப் பெறுவதில் விரும்பம் இல்லாமல் இருந்தார்.

அதே ஆண்டு டிசெம்பர் மாதம் ராஜிவ் காந்தி அதிகாரத்தையும் இழந்தார். 1990ஆம் ஆண்டு தி.மு.க ஆதரவுபெற்ற வி.பி.சிங் ஆட்சிக்கு வந்து இந்திய படைகளும் திரும்பி வந்தன.

இறையாண்மை பெற்ற இலங்கை போன்ற நாடுகளுக்கு, நாம் நினைத்தமட்டில் படைகளை அனுப்ப முடியாது. இதனால் பிரபாகரனுக்கோ, புலிகள் அமைப்புக்கோ ராஜிவ் காந்தி மீது பயமோ அச்சமோ கிடையாது.

புலிகளுக்கு அவரது கொலைக்கான தொடர்பில் சம்பந்தமே இல்லை. இந்தக் கொலையில் விடுதலைப் புலிகள் உறுதியாக ஈடுபடவே இல்லை என்று நான் சவால் விடவும் இல்லை. இந்த விவகாரங்களை அலசி ஆராய்ந்து பார்த்தால் வழக்கை விசாரித்தவர்கள் சொல்லும் கூற்றுக்கு அர்த்த மில்லை என்பது என் கருத்து.

1990ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபா மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் சென்னையில் கொல்லப்பட்டார்கள். அதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு இருப்பது தெரியவந்தது. இந்தக் குழுவில் சிவராசன் ஈடுபட்டு இருப்பது பற்றி சொல்லப்பட்டது. அந்த சமயத்தில் இவர்கள் எல்லோரும் சென்னையில் இருந்து யாழ்ப் பாணத்துக்கு தப்பிச் சென்றனர்.

ராஜிவ் கொலையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு இருந்தால் அடுத்த நிமிடமே இங்கிருந்து தப்பியிருப்பார்கள். ஏன் போகவில்லை? 1991 மே 21ஆம் திகதி மனித வெடிகுண்டு மூலம் ராஜிவ் கொலை நடந்தது. கிட்டத்தட்ட ஜூன் 23 ஆம் திகதி வரை சிவராசன் சென்னையில்தான் இருந்தார்.

சம்பவம் நடந்த ஸ்ரீ பெரும் புதூருக்கும் கடற்கரைக்கும் மிகப் பெரிய தூரம் கிடையாது. புலிகள் சாலையில் பறப்பதைவிட படகில் பறப்பதில் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆனால், அவர் அப்படி போகவில்லை. ஸ்ரீ பெரும்புதூரிலிருந்து ஆட்டோவில்தான் சென்னைக்கு எல்லோரும் ஒன்றாகத் திரும்பி வந்துள்ளனர்.

மறுநாள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நளினியை, சிவராசன் அவரது அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் கொண்டுபோய் விட்டுள்ளார். இடையில் சுபா, நளினி, பத்மா ஆகியோருடன் சிவராசன் திருப்பதிக்கும் சென்று வந்துள்ளார். இவர்கள் என்ன பக்தி புலிகளா?

24ஆம் திகதி செய்தித்தாளில் மனித வெடிகுண்டு தாணுவின் புகைப்படம் வெளிவந்து விடுகிறது. அது தடயவியல் வல்லுநர் சந்திர சேகர் லீக் அவுட் செய்ததால் வந்தது. அதன் பிறகு சிவராசன் சாலை மார்க்கமாக டில்லி செல்ல திட்டமிட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் தானே சென்றிருக்க வேண்டும்.

ராஜிவ் காந்தியை கொலை செய்வதற்கு ஒருநாள் முன்பு சிவராசன், வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இருந்த கனகசபாபதி என்பவரை டில்லிக்கு அனுப்பி வாடகை வீடு பார்க்கச் சொல்லியிருந்தார். மற்றொரு குற்றவாளியான ஆதிரையையும் டில்லிக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டார்.

இவர்கள் எதற்காக டில்லி சென்றனர்? அப்போது இருந்த பிரதமரைக் கொல்லவா? அல்லது செங்கோட்டையைத் தகர்க்கவா? இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கக் காரணம் இந்த விவகாரத்தில் புலிகளின தொடர்புகள் சந்தேகத்துக்குரியவை என்பதை விளக்கத்தான் என்று ஃபெராஸ் அஹ்மத் கூறியுள்ளார். (எ-11)

சர்வதேச...

அளவுப் பாதணிகள் பொருந்தும் என்று நினைப்பது முறையாகாது என்பதை அன்று ஜனாதிபதி அவர்களுக்கு எடுத்துக் காட்டினேன். இன்றும் கூறிவைக்கின்றேன்.

வட கிழக்கு மக்களின் விடிவிற் காகத்தான் 13-வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதனை நாடு முழுவதும் வேண்டுமென்றே நடைமுறைப்படுத்தப் போய் எமக்குத் தந்துதவப் போன சமச்சீர்மையற்ற அதிகாரப் பகிர்வானது கவனத்திற்கு எடுக்கப்படாமல் போயுள்ளது.

உலகமானது இன்று சுருங்கி வந்து பூகோளக் கிராமமாகப் பரிணாமத்துள்ளதை எமது பேச்சுக்களில் எடுத்துக் காட்டினோம். பெருவாரியான எம் மக்களின் வாக்குகளைப் பெற்றிருக்கும் அதே மக்களின் ஆத்திரம் என்மீது படர என்தோல் காலச் சொற்களுக்கு உயிரூட்டும் விதத்தில் நான் ஜனாதிபதி முன் சென்று என் உறுதி மொழியை எடுத்துக் கொண்டேன்.

வேண்டியதைக் கேளுங்கள் தருவோம் என்றார்கள். நாம் கேட்டோம். சட்டப்படி பிரதம செயலாளர் முதலமைச்சரின் கருத்தொருமிப்புடன் நியமிக்கப்பட வேண்டும். எனவே எம் இரு தரப்பாருக்கும் ஏற்புடையதான ஒருவரை பிரதம செயலாளராக நியமிக்கக் கோரினேன். சரி என்றார் ஜனாதிபதி. இதுவரையில் நியமிக்கவில்லை.

அடுத்து இராணுவப் பின்புல மற்ற ஒருவரை ஆளுநர் ஆக்குங்கள என்றோம். சரி என்றார் ஜனாதிபதி. ஆனால் முன்னிருந்த இராணுவ பின்புலம் உள்ள ஆளுநருக்கு மறு வாழ்வு கொடுத்துள்ளார் ஜனாதிபதி.

எமது பாதிப்படைந்த மக்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டிய ஜனாதிபதி இராணுவப் பின்புலமுடைய ஆளுநருக்கு மறு வாழ்வு கொடுத்துள்ளார். ஆகவே எமது கோரிக்கைகளைப் புறக்கணித்து மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை நிலை நாட்டுவதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது.

ஜயாயிரத்து எண்ணூற்றி முப்பத்தியொரு மில்லியனை வடமாகாண விருத்திக்கு நாம் ஒதுக்கியுள்ளோம் என்று கூறி விட்டு ஆயிரத்து எண்ணூற்றி எழுபத்தி ஆறு மில்லியனை மட்டும் எமக்குத் தந்து விட்டு மூவாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தி ஐந்து மில்லியனைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு அத் தொகையின் செலவு பற்றி எமக்குத் தெரிவிக்காமலே தமக்கேற்ற வாறு செலவு செய்ய முற்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் ஏற்பைப் பெறாமல் தான்தோன்றித்தனமாக அவற்றைச் செலவு செய்ய முற்படுகின்றது.

இவையாவும் அரசாங்கம் தமிழ்ப் பேசும் மக்களின் ஆதங்கங்களை, அபிலாஷைகளை, ஆசைகளை, எதிர்பார்ப்புக்களை அடியோடு சாய்த்துத் தமது கரவான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மெருகூட்ட விழைவதை எடுத்துக் காட்டுகின்றன. இதற்கு ஏம்மவர்களில் சிலர் ஒத்தூதுவது வருத்தத்தைத் தருகின்றது.

எனவேதான் எமது அடுத்த கட்ட நடவடிக்கையாக நாம் சர்வதேச நாடுகளுடன் எமது பிரச்சினைகளை அலசி ஆராய வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளோம் என்பதை எடுத்துக் கூற விரும்புகின்றேன். நாம் வெளி நாடுகளுடன் பேச விழைவது உள்நாட்டில் எமது குரலுக்கு மதிப்பில்லை என்ற காரணத்தினாலேதான் என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வானது இரு தரப்பாரும் பேசித் தீர்மானிக்க வேண்டிய ஒரு விடயம். அதை எவ்வாறு ஜனாதிபதி தர முடியும்? அவ்வாறு அவரால் தர முடியும் என்றால் எம்மிடம் எதனை எதிர்பார்க்கின்றார்கள்?

வந்து விழுங்கள் என் கால்களில்! நான் நினைத்தால் உங்களுக் கொரு தீர்வு தருவேன் என்பது தானா அதன் அர்த்தம். இப்பேர்ப்பட்ட மத்திய அரசாங்கச் சிந்தனைப் பின்னணியே இன்று வரை எமது தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற முடியாது செய்துள்ளது.

இதுவரையில் எந்த ஒரு அரசாங்கமும் தேசியப் பிரச்சினைக்கு எமது தீர்வு இதுவே என்று வெளிப்படையாகக் கூற முன்வரவில்லை. தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லையே. ஏன் வீணாகப் பிதற்றுகின்றார்கள் என்றுதான் கூறியுள்ளார்கள் என்றார். (எ-11)

மண்டைதீவு திருவெண்காட்டில் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலய 6-ம் திருவிழா ஆகிய இன்று மாலை 5.00 மணிக்கு பத்மநாதன் சிவமைந்தனின் இசைக் கசேரியும் இரவு 7.30 மணிக்கு பூரண சரணாகதி என்ற பொருளில் யாக்கிரதசைத்தான்ய சுவாமிகளின் தெய்வீக உரையும் இடம்பெறும். (ந)

15 கிலோ...

பற்றைக்குள் கஞ்சா பொதி ஒன்று இருப்பதை கண்ட கடற்படையினர், அதனை மீட்டு தம்மிடம் ஒப்படைத்ததாகப் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லையெனவும் குறித்த கஞ்சா பொதி, கடல் வழியாக கொண்டு வரப்பட்டு, அவ்விடத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (எ-11)

காங்கேசன்...

ஜனாதிதிமாளிகைகள் இருக்கின்றன.

கொழும்பில் ஜனாதிபதி மாளிகை இருந்த போதிலும் பிரதமருக்காக ஒதுக்கப்பட்ட அலரிமாளிகையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

ஜனாதிபதிக்காக வருடாந்தம் பெருந்தொகை பணம் வரவு செலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப் பட்டு வருகிறது. இந்த வருடத்தில் ஜனாதிபதிக்காக 856 கோடி ரூபாய ஒதுக்கப்பட்டது.

இதனை தவிர கடந்த ஏப்ரல்மாதம் மேலும் 34 கோடி ரூபாய் ஜனாதிபதியின் செலவுக்காக ஒதுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

ஹன்டர்...

ரக வாகனம் மாணவனை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த மாணவன், முழங்காவில் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மாணவனது சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஹன்டர் ரக வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணை களையும் மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மாணவன் முழங்காவில் ஆரம்ப மகா வித்தியாலயத்தில் தரம் 2இல் கல்வி கற்று வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-15,11)

மருத்துவ...

றுள்ளார்.

இதனால் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளர்களினால் உறுதிப்படுத்த முடியாமல் போனதனையடுத்தே மருத்துவ பீட நிர்வாகம் மருத்துவ பீடத்தில் நிகாப் அணிவதற்கு தடை விதித்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

நிகாப் அணிவதற்கு நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக் கழகங்களும் தடைவிதித்துள்ளதனையும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பீடாதிபதி சுட்டிக்காட்டியுள்ளதோடு இது மத சுதந்திரத்தை புண்படுத்தும் நோக்கம் அல்ல எனவும் தெரிவித்தார். (எ-4)

தமிழர்களுக்கு...

என்ன என்ற கூளுரையை ஏற்க வேண்டும். அனைவரும் சேர்ந்து போராடினால் ஈழத்திலே வாழ்கின்ற தமிழனுக்கு உண்மையான சுதந்திரத்தை பெற்றுத்தருவதற்கான போராட்டத்தில் வெல்ல முடியும் என்றும் கருணாநிதி குறிப்பிட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிலர், ஆர்ப்பாட்டம் முடிந்த பிறகு பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமியின் உருவப்படத்தை கொளுத்தினர். (எ-6)

ஹயஸ்...

மில் பணியாற்றி வந்த குருணாகல் பிரதேசத்தை சேர்ந்த 33 வயதன ஆர்.டி சுமிந்த என்ற இராணுவ சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11,15)

ஐ.நா சர்வதேச...

வலும் தமக்கு உதவும் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பதற்குத் தடையில்லை.

இனப் பிரச்சினை தொடர்பிலான எந்த வன்முறைச் சம்பவம் தொடர்பிலும் சாட்சியமளிக்கலாம். உதாரணமாக, கொலை, கடத்தல், காணாமல்போதல், காணாமல்போகச் செய்தல், பாலியல்வன்கொடுமை, காணி அபகரிப்பு, சித்திரவதைக் குட்படுத்தப்படல், அரசியல் கைதிகள், தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், அச்சுறுத்தல்கள். உங்கள் சாட்சியத்தில், சாட்சியம் தருபவர் தொடர்பான விடயங்கள் (பெயர், வயது, முகவரி).

சம்பவம் நடந்த இடம், சம்பவம் நடந்த திகதி, சம்பவம் பற்றிய முழுமையான விபரிப்பு என்பன கவனிக்கப்பட வேண்டும்.

சம்பவத்திற்கு காரணமானவர்கள் யார் என்பதைப் பற்றி இயன்ற வரையில் முழுமையான விபரணம். உதாரணமாக ஷெல் தாக்குதலால் மரணமடைந்திருந்தால் எந்தத் திசையிலிருந்து அந்த ஷெல் தாக்குதல் நடந்தது. அந்தத் திசையில் யார் நிலை கொண்டிருந்தனர் போன்ற தகவல்கள், காணாமல் போனோர் தொடர்பில், எந்த முகாமைச் சேர்ந்தவர்கள் கடத்திக் கொண்டு போனார்கள் போன்ற விபரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

சாட்சியங்கள் தமிழிலும் வழங்கப்படலாம். ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியமில்லை. சுயமாகத் தயாரித்து அனுப்பலாம். இதற்கென்றொரு படிவம் இல்லை. கடிதம் போல் கூட எழுதி அனுப்பலாம்.

உதவி தேவைப்படுவோர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இல.43, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற எமது கட்சி அலுவலகத்தை நாடமுடியும்.

சாட்சியத்தை, மின்னஞ்சல் மூலமாக: oisl_submissions@ohchr.org என்ற முகவரிக்கோ அல்லது OISL, UNOG-OHCHR,8-14 Rue de la Paix CH-1211 Geneva 10, Switzerland என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

சாட்சியமளிப்பதற்கான மாதிரி விண்ணப்ப படிவத்தினை தமிழ் பத்திரிகைகளில் பார்வையிட முடியும். அவ்வாறான ஒரு படிவத்தினை நீங்களாகவே தயாரிக்க முடியும் அல்லது தமிழ் செய்தி இணையத்தளங்களில் இருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும். அப்படிவங்களை பூர்த்தி செய்த பின்னர் மேலே கூறப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு அல்லது தபால் முகவரிக்கு நீங்களாகவே அனுப்பி வைக்க முடியும். மேலதிக உதவி தேவைப்படுவோர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு விபரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இல 43, 3-ம குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், தொலைபேசி எண்: 0212223739, 0773024316, 0777301021, மின்னஞ்சல்: tnpfparty@gmail.com சாட்சியமளிப்பதற்கான இறுதித் திகதி: 30 அக்டோபர் 2014 ஆகும்.

தமிழ் மக்களுக்கு இடம்பெற்ற இடம் பெற்றுவரும் அநீதிகளை சம்பவங்களை விசாரணைக்குழுவுக்கு முழுமையாக சமர்ப்பிப்பதன் மூலம் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் நீதி பெற்றுக் கொள்வதற்கு கிடைத்துள்ள இச் சந்தர்ப்பத்தை அனைத்து தமிழ் மக்களும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கோருகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கு...

தியா விசா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை சேப்பாக்கத்தில் டெசோ அமைப்பின் சார்பில், நேற்றுக காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. தலைவர் கருணாநிதி, தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன், மு.க. ஸ்டாலின், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய திருமாவளவன், ஈழப்பிரச்சனையில் முந்தைய மத்திய அரசையும் தி.மு.கவையும் தொடர்ந்து குறை சொல்லிவந்தவர்கள், இலங்கை ஜனாதிபதி மகிந்த முன்னிலையில் பதவியேற்றுக் கொண்ட நரேந்திர மோடி குறித்து என்ன சொல்லப் போகிறார்கள் என்று கேள்வியெழுப்பினார்.

கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமில்லை என மத்திய அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்திருப்பதையும் திருமாவளவன் சுட்டிக்காட்டிப் பேசினார்.

இதற்குப் பிறகு பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஒரு போராட்டத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்தால்தான் கோரியது கிடைக்கும். இந்தியாவுக்கு அருகில் அடிமைப்பட்டுக் கிடக்கிற அநத இனம் சிலிர்த்து எழ தமிழகத்திலிருந்து எழுந்த இந்த முழக்கமெல்லாம் சிங்களவர்களின் காதுகளில் விழுகிறதோ இல்லையோ, தமிழ் ஆர்வலர்களின் காதுகளில் விழுந்தால், அவர்கள் ஒற்றுமை நம்மை வழிநடத்தும் என்று குறிப்பிட்டார்.

பக்கத்துத் தீவில் உள்ள தமிழனை வாழவைக்க முடியாமல் இங்கே உள்ள தமிழன் வாழ்ந்தால் என்ன வாழாவிட்டால

19 ஆம் பக்கம் பார்க்க....

வேலையாட்கள் தேவை

பிரபல நிறுவனத்திற்கு அனுபவமுள்ள

காசாளர்
சிட்டை எழுதுனர்
களஞ்சியக் காப்பாளர்
விற்பனையாளர்கள் தேவை

தொடர்புகளுக்கு : 0778730114
0778473222

(7578)

வீடு வாடகைக்குத் தேவை

ஆங்கிலப் பாடசாலை ஒன்றை நடாத்துவதற்கு சங்கத்தானை, சாவகச்சேரியை அண்மித்த பிரதேசத்தில் வீடு வாடகைக்குத்தேவை

தொடர்புகளுக்கு ELTC ஆங்கிலப்பாடசாலை கிளி/மத்திய கல்லூரி முன்பாக 077 074 3131

(C-8399)

சந்நிதியின் அருளால் ஆரோக்கியம் தழைக்கட்டும்

மாபெரும் அறிமுக விற்பனை

Sylo ICE CREAM

பால், வெண்ணை, தேன், பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, அத்திப்படும் போன்ற இயற்கையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த புதிய தலைமுறை அம்சங்களுடன், TCT, Preser Vative இராசாயனங்கள் சேர்க்காமல் அதிஉயர் தொழில் நுட்ப முறையில் உங்கள் ஆரோக்கியத்தின் மீது அக்கறையுடன் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம் வகைகள் அறிமுகவிலையில்!

Hot Line:-0777710785
Phone:-021 221-2003

சந்நிதியின் கோவில் முன்புறம்
எமது விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்
(வாடிக்கையாளர் அனைவருக்கும் கந்தசஸ்டி கவசம் இலவசமாக வழங்கப்படும்)

Factory
இல.76 அம்மன் கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு.யாழ்ப்பாணம்

(7548)

மரண அறிவித்தல்

தர்மலிங்கம் நல்லம்மா

மணல்பாதி கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நல்லம்மா 01.09.2014 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு வள்ளியம்மை தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற மாணிக்கம் பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கம் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சரோஜாதேவி (ஹொலன்ட்), ஜெயநாதன் (புத்தளம்), யசோதாதேவி (புத்தளம்), சுசிலாதேவி (கனடா), சிவநாதன் (சுவிஸ்), வாசுகி (குடும்பநல உத்தியோகத்தர் - சோளங்கன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராசா (ஹொலன்ட்), சுரேந்திரன் (புத்தளம்), சிவஞானம் (கனடா), புவனேஸ்வரி (புத்தளம்) சொர்ணசோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகிர்தன் (ஹொலன்ட்), சுகன்யா (சுவிஸ்), இந்துஜா, பிரகதீஷ் (புத்தளம்) சுதாகரன் (சவூதி அரேபியா), திவ்யா, தனுஷ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், லெக்ஷினா, லாவிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை 05.09.2014 அன்று மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு, கரவெட்டி. (C-8401)

இங்ஙனம்: அன்னாரின் குடும்பத்தினர்: த.வாசுகிதேவி - மகள் (குடும்ப நல உத்தியோகத்தர் சோளங்கன்) 0779553091

வடமராட்சியில்.....

இலகு தமிழ் விளக்கத்துடன் தெளிவான ஆங்கிலக் கல்வியை வழங்கி சாதனை படைத்து வரும் தனித்துவமான நிறுவனம்

Oxford English Academy
P.K. Lane Point Pedro.

மேலும் சில புதிய பிரிவுகள் ஆரம்பம்.

06.09.2014 (Saturday)

- A/L எடுத்தவர்களுக்கான விசேட பிரிவு (பிரிவு II)
- வெளிநாடு செல்பவர்களுக்கான விசேட பேச்சுப் பயிற்சியை உள்ளடக்கிய தனிப்பிரிவு (பிரிவு II)
- வேலை செய்வோருக்கென தனிப்பிரிவு (பிரிவு III)
- 2014 – டிசம்பர் O/L பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு மீளவும் தோற்றவுள்ளவர்களுக்கான விசேட பயிற்சிகளை உள்ளடக்கிய விசேட பிரிவு (பிரிவு II)

By Jothy

(நேர சூசிகை மற்றும் அனுமதிப் படிவங்களை அலுவலகத்தில் முற்கூட்டியே பெறவும்)

(C-8404)

சிறுமயம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

தென்னிந்திய திருத்தல தரிசனம்
(கோயில்கள் சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கம்)

மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி அம்மன், அழகர் கோயில், ஆயிரம்கால் மண்டபம், சுசீந்திரம், கன்னியாகுமரி, பகவதியம்மன், திருச்செந்தூர், இராமேஸ்வரம், இராமநாதசுவாமி கோயில், அக்னிதீர்த்தம், 22 புனிதகிணறுகளில் நீராடல், பிள்ளையார்பட்டி விநாயகர், திருச்சி, ஸ்ரீரங்கம், சமயபுரம்மாரியம்மன், ஆடிகும்பேஸ்வரர், சாரங்கபாணி கோயில், தஞ்சை பெரியகோயில், திருவாரூர், கும்பகோணம், சீர்காழி, சிதம்பர நடராஜர், காஞ்சிகாமாட்சி, ஏகாபரேஸ்வர் கோயில், வரதராஜபெருமாள்கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர், மாங்காடு மாரியம்மன், திருவேற்காடுகருமாரியம்மன், திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, பெங்களூர் சிவன்கோயில், மைசூர்மகாராஜஅரண்மனை, பொருட்காட்சியகம், பிருந்தாவனத்தோட்டம், நந்திக்கோயில், சாமுண்டேஸ்வரி கோயில், ஊட்டி தாவரவியல் பூங்கா, ஊட்டிஏரி, ஜம்பூத ஸ்தலங்கள், ஆறுபடைவீடுகள், நவக்கிரக கோயில்கள், சென்னை சீரடிபாபா, அண்ணா, எம்.ஜீ.ஆர்.நினைவு சதுக்கங்கள், மெரினா கடற்கரை மற்றும் சுற்றுலாத்தலங்கள்.

சென்னையில் ஒரு நாள் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒதுக்கப்படும்.

உள்ளடக்கப்பட்டவைகள்:
1. இரு வழி விமானக்கட்டணம் (Return Air Ticket all taxes).
2. உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு,காலை,மாலை தேநீர் மற்றும் குளிர்பானம்
3. சுத்தமான குடிநீர்.(Mineral Water)
4. குளியலறை இணைந்த தங்குமிட வசதி. (Attached Bathroom, Colour TV).
5. முழு சுற்றுலாவிற்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து.
6. திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும்

தரிசனம்: 15 நாட்கள்
புறப்படும் திகதி: 19.10.2014

விபரங்கட்கு
Lion ப.பார்த்தீபன்
tourism
இணுவில் கிழக்கு,
இணுவில்
077 10 10 104

(7575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.